15.06.15

# தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## குஜராத்தில் தென்மேற்கு பருவமழை

ஆமதாபாத் : தெற்கு குஜராத் மற்றும் சத்தீஸ்கர் ஆகிய மாநிலங்களில் தென்மேற்கு பருவமழை துவங்கி உள்ளது. இதன் காரணமாக தெலுங்கானா மற்றும் ஆந்திராவில் கனமழை பெய்து வருகிறது.

## ஒட்டன்சத்திரத்தில் தக்காளி விலை உயர்வு

ஒட்டன்சத்திரம்: ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் வரத்து குறைவால் தக்காளி கிலோ ரூ.17க்கு விற்றது.ஒட்டன்சத்திரம், அத்திக்கோம்பை, அம்பிளிக்கையை சுற்றியுள்ள பகுதிகளில் தக்காளி அதிகமாக பயிரிடப்படுகிறது. நாட்டு ரகத்தை காட்டிலும், ஒட்டு ரகங்களே விளைவிக்கப்படுகின்றன. மழை, வெயில் பாதிப்பில் தக்காளி செடிகள் சேதமாகாமல் இருக்க,பல இடங்களில் பந்தலில் தக்காளி விளைவிக்கப்படுகிறது. சமீபத்தில் பெய்த கோடை மழையால் தக்காளி செடிகளில் இருந்த பூக்கள் உதிர்ந்துவிட்டன. விளைச்சல் பாதிக்கப்பட்டது. கடந்த வாரம் தக்காளியின் விலை கிலோ ரூ.13 ஆக இருந்தது. நேற்று கிலோ ரூ.17க்கு விற்பனையானது. ----

## திண்டுக்கல் கண்காட்சியில் வகைவகையாய் சேவல்கள்




திண்டுக்கல் :திண்டுக்கல்லில் கிளிமூக்கு விசிறிவால் சேவல் வகைகளின் அகில இந்திய கண்காட்சி நேற்று நடந்தது. இதில் 200 க்கும் மேற்பட்ட சேவல்கள் பங்கேற்றன.இந்திய நாட்டு ரகமான'அசீல்' கோழி,சேவல்களின் மூக்கு 'கிளி' போன்றும் வால் 'விசிறி' போன்றும் இருக்கும். அவற்றை கிளிமூக்கு விசிறிவால் கோழி, சேவல் என்று கூறுவர். இந்த ரகங்களை அழகுக்காக வளர்க்கின்றனர். விலை ரூ.20 ஆயிரம் முதல் ரூ.1.5 லட்சம் வரை இருக்கும். இந்த சேவல்களின் அகில இந்திய கண்காட்சி நேற்று திண்டுக்கல்லில் நடந்தது. இந்த கண்காட்சி தமிழகத்தில் முதல் முறையாக நடத்தப்பட்டது.கால்நடை மருத்துவ பல்கலை திண்டுக்கல் ஆராய்ச்சி மையத்தலைவர் பீர்முகமது துவக்கி வைத்தார். கண்காட்சி ஒருங்கிணைப்பாளர் நவாஷ்கான் முன்னிலை வகித்தார். ஆந்திரா கேரளா கர்நாடகா மகாராஷ்டிரா மேற்குவங்கம் மற்றும் தமிழகம் முழுவதும் இருந்து சேவல்கள் பங்கேற்றன. மயில் காகம் வல்லுரு ஆந்தை கோழி என 5 வகையை சேர்ந்த 200 க்கும் மேற்பட்ட பறவைகள் இடம் பெற்றன.குளித்தலை பேராசிரியர் ஏ.அக்பர்உசேன் கூறியதாவது:

இருபது ஆண்டுகளுக்கு மேலாக கிளிமூக்கு விசிறிவால் சேவல்களை வளர்க்கிறேன். அனைத்து வகை சேவல்களையும் பார்ப்பது அரிது. இந்த கண்காட்சி மூலம் ஒரே இடத்தில் அனைத்து வகைகளையும் பார்க்க முடிந்தது. ஒரு கோழி குஞ்சு ரூ.2 ஆயிரம் வரை விற்கப்படும். இவற்றை சண்டைக்கோ உணவுக்கோ பயன்படுத்த மாட்டோம். இறந்தால்

புதைத்து விடுவோம். இதன் மூலம் பறவைகளையும் மனிதனாக பாவிக்கிறோம் என்றார்.

## முட்டை கொள்முதல் விலை குறைய வாய்ப்பில்லை

நாமக்கல்: 'நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை குறைய வாய்ப்பில்லை என்பதால் பண்ணையாளர்கள் உற்பத்தியில் கவனம் செலுத்த வேண்டும்' என தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு (நெக்) மண்டலத் தலைவர் செல்வராஜ் அறிவுறுத்தி உள்ளார்.நடப்பு ஆண்டு வடமாநிலங்களில் கோடையின் தாக்கம் மிகப் பெரிய அளவில் இருந்தது. அதன் காரணமாக இந்தியாவின் முட்டை உற்பத்தியில் பெரிய மாநிலங்களான ஆந்திரா மற்றும் தெலுங்கானாவில் லட்சக்கணக்கான முட்டையின கோழிகள் இறந்தன. அதனால் 25 சதவீதம் அளவிற்கு முட்டை உற்பத்தி பாதித்துள்ளது.மேலும் குறைந்த முட்டை உற்பத்தி காரணமாக ஐதராபாத், விஜயவாடா, மேற்கு கோதாவரி உள்ளிட்ட ஆந்திரா மற்றும் தெலுங்கானா உற்பத்தி மையங்களில் முட்டை பற்றாக்குறையாக உள்ளதால் அப்பகுதிகளில் முட்டை விலை உயர்ந்து வருகிறது.தேசிய முட்டை ஒருங்கிணைப்புக்குழுவின் (நெக்) நாமக்கல் மண்டலத் தலைவர் செல்வ ராஜ் கூறியதாவது:தேவைக்கேற்ற அளவு முட்டை உற்பத்தி இல்லாத நிலையில் வியாபாரிகள் இருப்பு வைத்திருந்த முட்டைகளும் முழுமையாக விற்று தீர்ந்துவிட்டன. அதனால் முட்டை விலை மேலும் உயர வாய்ப்புள்ளது.
உயர்ந்த வேகத்தில் மீண்டும் விலை குறைந்துவிடுமோ என்ற அச்சம் இல்லாமல் முட்டை உற்பத்தியில் பண்ணையாளர் கவனம் செலுத்த வேண்டும். இப்போது உள்ள சந்தை நிலையில் பண்ணையாளர்கள் முட்டையை குறைத்து விற்க வேண்டிய அவசியமில்லை. அதேபோல் முட்டை விலை இப்போது குறைய வாய்ப்பில்லை, என்றார்.

## பழநியில் விவசாயப்பணிகள்: உலக வங்கி அதிகாரி குழு ஆய்வு



பழநி: பழநி பகுதியில் நீர்வள, நிலவளத் திட்டத்தின் கீழ் நடந்துள்ள பணிகளை உலக வங்கி அதிகாரிகள் குழுவினர் ஆய்வு செய்தனர்.பழநி வேளாண்துறை மூலம் உலக வங்கியின் நீர்வள, நிலவள திட்டத்தின் கீழ் அய்யம்புள்ளி பகுதியில் 100 ஏக்கர் திருந்திய நெல் சாகுபடி, கரடிக் கூட்டம் பகுதியில் ராகி சிறு தானிய திடல்கள் அமைக்கப்பட்டுள்ளது. இதனை உலக வங்கி வேளாண் ஆய்வுகுழு தலைவர் பீனாஸ்ட், இயந்திர வல்லுனர் டோனி, பொருளாதாரப்பிரிவு பிளங்கா அமல்டோ ஆகியோர் நேற்று பார்வையிட்டனர். விவசாயிகளின் கருத்துகளை கேட்டறிந்தனர். இவர்களுடன் திண்டுக்கல் மாவட்ட இணை இயக்குனர் சம்பத்குமார், பழநி உதவி இயக்குனர் சாந்தாமணி, நீர்வள, நிலவளதிட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்ட திட்டங்களை வரைபடத்துடன் விளக்கினர். பொதுபணித்துறை உதவி செயற்பொறியாளர் முருகன் பங்கேற்றனர்.இது குறித்து உதவி இயக்குனர் சாந்தாமணி கூறுகையில், "உலக வங்கி நிதி உதவியுடன் 2012--2015ம் ஆண்டுக்கு ரூ.75 லட்சம் நிதி கிடைத்துள்ளது. விவசாயிகள் நூறு சதவீதம் மானியம், நவீன தொழில்நுட்ப பயிற்சிகள் வழங்கப்படுகிறது. திருந்திய நெல் சாகுபடி முறையில் தற்போது 100 ஏக்கர் வரை விவசாயம் செய்கின்றனர். இவ்வாண்டு சிறுதானியவகைகளை ஊக்கப்படுத்த 75 செயல் விளக்க திடல் கள் அமைக்கப்பட்டுள்ளது.

கரடிக்கூட்டம் பகுதியில் ராகி 5 விவசாயிகள் பயிரிட்டுள்ளனர். உம்மி, கல் நீக்கும் கருவி ரூ.2.25 லட்சத்தில் விவசாயக்குழுவுக்கு வழங்கியுள்ளோம். இவற்றை உலக வங்கி அதிகாரிகள் குழுவினர் ஆய்வு செய்தனர். ”என்றார்.

## கள்ளக்குறிச்சி பகுதியில்மாம்பழ வரத்து அதிகரிப்பு

கள்ளக்குறிச்சி:மாம்பழ சீசன் உச்சமடைந்துள்ள நிலையில், கள்ளக்குறிச்சி பகுதியில் வரத்து அதிகரித்துள்ளது.கோடை காலத்தில் முக்கனிகளில் முதற்கனியான மாம்பழ விளைச்சல் அதிகமாக இருக்கும். வழக்கம் போல் இந்தாண்டு மாம்பழ வரத்து அதிகமாக உள்ளது. திருச்சி பகுதியிலிருந்து பங்கனபள்ளி, சேலம் பகுதியிலிருந்து மல்கோவா மற்றும் லோக்கல் வகையான நீலம், ஒட்டு ரக மாம்பழங்கள் கள்ளக்குறிச்சி மார்க்கெட்டில் அதிகமாக விற்பனை செய்யப்படுகிறது.

ஒரு கிலோ 40 முதல் 50 ரூபாய் வரையில், மாம்பழங்கள் விற்பனை செய்யப்படுகிறது. தற்போது சீசன் முடியும் தருவாயில் கள்ளக்குறிச்சி மார்க்கெட்டில் மாம்பழ வரத்து அதிகரித்துள்ளது.

## கறிவேப்பிலை விளைச்சல் அதிகரிப்பு விலை சரிவால் விவசாயிகள் அதிர்ச்சி

ஆத்தூர்: ஆத்தூர் பகுதியில், கோடை மழையில் கறிவேப்பிலை விளைச்சல் அதிகரித்துள்ளதால், கிலோ, இரண்டு ரூபாய்க்கு விற்பதால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.ஆத்தூர், தலைவாசல், வீரகனூர், கெங்கவல்லி, பெத்தநாயக்கன்பாளையம் பகுதியில், வாசனை பயிரான கறிவேப்பிலை, 500 ஏக்கர் பரப்பில் பயிர் செய்யப்பட்டு வருகிறது. இங்கு, பயிர் செய்யப்படும் கறிவேப்பிலை "ருசி' மிகுந்து காணப்படுவதால், வியாபாரிகள் அதிகளவில் வாங்கி செல்கின்றனர். ஆத்தூரில் இருந்து, சேலம், கோவை, திருச்சி, மதுரை, சென்னை,

புதுச்சேரி, கேரளா என பல்வேறு பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. வைட்டமின் "ஏ' மற்றும் இரும்பு சத்து அதிகளவும், ஞாபக சக்தியை அதிகரிக்கவும் கறிவேப்பிலை பயன்படுகிறது. கடந்த, ஏப்ரல், மே மாதங்களில், கோடை மழை பெய்ததால், கறிவேப்பிலை இலை துளிர் விட்டு அதிகளவில் விளைச்சல் ஏற்பட்டுள்ளது. ஏப்ரல் மாதத்தில், ஒரு கிலோ கறிவேப்பிலை, 25 முதல், 30 ரூபாய்க்கு விற்பனையான நிலையில், மே மாதம், 15 முதல், 20 ரூபாய் வரை, விற்பனையானது.

சில நாட்களாக, கிலோ, இரண்டு ரூபாய்க்கு விற்பதால், கறிவேப்பிலை அறுவடை செய்யும் கூலி கூட வழங்க முடியாத நிலையில், விவசாயிகள் உள்ளனர்.

இதுகுறித்து ஆத்தூரை சேர்ந்த கறிவேப்பிலை விவசாயிகள் கூறியதாவது:

கறிவேப்பிலை, ஏக்கருக்கு, 6,000 செடிகள் நடவு செய்து, 15வது மாதத்தில் அறுவடை பணிகள் துவங்குகிறது. அதன்பின் மூன்று மாதத்திற்கு, ஒரு முறை ஏக்கருக்கு, மூன்று முதல், நான்கு டன் வரை மகசூல் கிடைக்கும். கோடை மழையால், விளைச்சல் அதிகரித்துள்ளது. தற்போது, கிலோ இரண்டு ரூபாய்க்கு விற்பதால், விளைந்த கறிவேப்பிலை அறுவடை செய்வதற்கு கூலித் தொகை கூட வழங்க முடியாத நிலை உள்ளது. இவ்வாறு, கூறினர்.

## ஒரு கிலோ எடையில் எலுமிச்சை பழம்

ஓமலூர்: ஓமலூர் தாலுகா, தீவட்டிப்பட்டியை அடுத்த எலத்தூர் பகுதியை சேர்ந்த ஓய்வுபெற்ற ஆசிரியர் சென்னகேசவன். இவருடைய தோட்டத்தில், எலுமிச்சை, கொய்யா, சப்போட்டா, தக்காளி, முள்ளங்கி, பீட்ரூட், கத்தரிக்காய் உள்ளிட்ட பழம் மற்றும் காய்கறி செடிகளை பயிரிட்டுள்ளார். இதில், ஒரு எலுமிச்சை செடியில், சில எலுமிச்சை பழங்கள், ஒரு கிலோ அளவிற்கு, பெரியதாக காய்த்துள்ளது. அனைத்து பழங்களும், அரை கிலோ முதல், ஒரு கிலோ வரை எடை கொண்டதாக உள்ளது. அதிக எடையுள்ள எலுமிச்சை பழத்தை, அப்பகுதி மக்கள்

அதிசயமாக பார்த்து செல்கின்றனர். ஓய்வு பெற்ற ஆசிரியர், தற்போது முழு நேர விவசாயியாக மாறி, விவசாயம் செய்து வருகிறார். இவருடைய பணியை பாராட்டி, வேளாண்மை துறை சார்பில், பாராட்டு மற்றும் பரி

## ரூ.30 லட்சத்திற்கு மஞ்சள் வர்த்தகம்

ஆத்தூர்: ஆத்தூர், வேளாண்மை உற்பத்தியாளர் மற்றும் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நடந்த ஏலத்தில், 700 மூட்டை மஞ்சள், 30 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது. ஆத்தூர், புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர், கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று முன்தினம் நடந்த மஞ்சள் ஏலத்துக்கு, கடலூர், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, நைனார்பாளையம், ஆத்தூர் அதன் சுற்றுவட்டார கிராம பகுதியைச் சேர்ந்த, 60 விவசாயிகள், 700 மூட்டை மஞ்சளை, விற்பனைக்கு கொண்டு வந்தனர். இதில், விரலி மஞ்சள் குவிண்டால், 6,000 ரூபாய் முதல், 8,660 ரூபாய் வரை, உருண்டை மஞ்சள் குவிண்டால், 5,009 ரூபாய் முதல், 7,800 ரூபாய் வரை விற்பனையானது. ஏலத்தில், 700 மூட்டை மஞ்சளை, 30 லட்சம் ரூபாய்க்கு, வியாபாரிகள் வாங்கி சென்றனர்.

## முருங்கை விலை உயர்வு: விவசாயிகள் மகிழ்ச்சி

வெள்ளகோவில்: வெள்ளகோவிலில் நேற்று முருங்கை காய் வரத்து, சற்று குறைந்தே காணப்பட்டது. இருந்தும், முருங்கைகாய் விலை உயர்வால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.மர முருங்கை, செடி முருங்கை என இரு வகையான முருங்கை காய்கள் விற்பனைக்கு வருகிறது. மர முருங்கை காய், சற்று நீளம் குறைவாகவும், தடிமனாகவும் காணப்படும். செடி முருங்கை காய், நீளமாகவும், சற்று தடிமன் குறைவாக காணப்படும். மர முருங்கை காய் நேற்று சந்தையில், 5 ரூபாய் வரை விற்றது.முன்னதாக, முருங்கை விவசாயிகள், தங்கள் விளை நிலங்களில்

விளைந்த முருங்கை காய்களை, 25 காய் கொண்ட கட்டாக கட்டி, 600 காய்கள் கொண்ட முருங்கை காய்களை, சாக்கு மூட்டையில் கட்டி கொண்டு வந்தனர்.

கடந்த, 2 மாதத்துக்கு முன்பு 25 காய் கொண்ட ஒரு கட்டு, 5 ரூபாய்க்கு விற்றது. அதே முருங்கை, நேற்று, 100 முதல், 120 ரூபாய்க்கு விலை போனது. 600 காய் கொண்ட ஒரு மூட்டை விலை, 2,000 முதல், 2,100 ரூபாய்க்கு விற்கப்பட்டது. தற்போது, முருங்கை பூ விடும் நேரமாகும். அதனால், ஒரு சில தோட்டங்களில் மட்டுமே, மர முருங்கை மற்றும் செடி முருங்கை காய்த்ததால் சற்று வரத்து குறைந்து காணப்பட்டது. ஒவ்வொரு வாரமும், முருங்கை காய் பெங்களூரு, கேரளா, கர்நாடகா, சென்னை போன்ற பகுதிகளுக்கு மொத்த வியாபாரிகள் மூலம், லாரிகளில் அனுப்பி வைக்கப்படுகிறது. நேற்று, 2 லோடு மட்டுமே முருங்கை வரத்து இருந்ததால், விலை அதிகமாக கிடைத்தது. இதனால் வெள்ளகோவில், மூலனூர், புதுப்பை, முத்தூர், குருக்கத்தி, தென்னிலை வட்டார விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

## கட்டுபடியாகாத மஞ்சள் விலை: விவசாயிகள் புலம்பல்

கோபி: மஞ்சளுக்கு கட்டுபடியான விலை கிடைக்காததால், கோபி பகுதி விவசாயிகள் வருத்தம் தெரிவித்துள்ளனர்.ஈரோட்டில் உற்பத்தியாகும் மஞ்சள், 85 சதவீதம் உணவுக்காக பயன்படுகிறது. எஞ்சியுள்ள, 15 சதவீதம் மருந்து தயாரிப்பு, பெயிண்ட், நறுமண பொருள், அழகுசாதன பொருட்கள் தயாரிக்க பயன்படுகிறது. கர்நாடகா, சேலம், ஆத்தூர், தர்மபுரி, கிருஷ்ணகிரி, ஓசூர், திருவண்ணாமலை, வேலூர் பகுதியில் இருந்து வழக்கமாக ஃபிப்., 15ம் தேதிக்கு மேல் புதிய மஞ்சள் வரத்தாகும். அப்போது மஞ்சள் வரத்து அதிகரிக்கும். மைசூரு சம்பா, 10ம் நம்பர் ஆகிய ரகங்கள் ஃபிப்ரவரி, மார்ச் மாதத்தில் அறுவடைக்கு வரும்.

இம்மாவட்டத்தில் மைசூரு சம்பா, 8ம் நம்பர், 10ம் நம்பர் ரகங்கள் அதிகளவில் பயிரிடப்படுவது வழக்கம். 8ம் நம்பர் மஞ்சள் டிச., மாதத்தில் அறுவடை பணி துவங்கி, ஜனவரியில் மார்க்கெட்டுக்கு வரத்தாகும். சில

மாதங்களாக, வி லை நிலையில்லாமல் இரு ந்தாலும், மாவட்ட விவசாயிகள் வேறு வழியின்றி, மீண்டும் மஞ்சள் சாகுபடி செய்து வருகின்றனர். கோபி தாலுகாவுக்கு உட்பட்ட தடப்பள்ளி மற்றும் அரக்கன்கோட்டை பாசன பகுதியில், முதல்போகத்தை எதிர்பார்த்து காத்திருக்கும் நிலையில், விவசாயிகள் மஞ்சள் சாகுபடிக்கு தயாராகி வருகின்றனர். கள்ளிப்பட்டி ஆற்றுப்பாலம் அருகே, மஞ்சள் சாகுபடிக்காக விவசாயிகள் நிலத்தை உழுது தயார் செய்து வருகின்றனர். இதுபற்றி அப்பகுதி விவசாயி ஒருவர் கூறியதாவது:நிலத்தில் ஒரிசா கோல்டு மற்றும் செலக்சன் ரக மஞ்சளை சாகுபடி செய்யவுள்ளேன். தற்போதைய மஞ்சள் விலை விவசாயிகளுக்கு திருப்திகரமாக இல்லை. டிராக்டரில் ஒரு மணி நேரம் உழவு செய்ய, ஒரு ஏக்கர் நிலத்துக்கு,1,200 ரூபாய் வரை செலவாகிறது. ஆனால், ஏக்கருக்கு ஒன்றரை மணி நேரம் உழவு செய்ய வேண்டும். விதை மஞ்சள் கிலோ, 20 முதல், 25 ரூபாய் வரை விலைபோகிறது. அடி உரமாக பாஸ்பேட், டி.ஏ.பி.,யிட வேண்டும். ஏக்கருக்கு, 30 முதல், 40 குவிண்டால் வரை, மஞ்சள் விளைந்தால் மட்டுமே, விவசாயிகள் ஓரளவுக்கு பயன்பெறுவர். தற்போது அதிகபட்சம், 20 குவிண்டால் விளைவதே அரிது. குவிண்டால், 12 முதல், 15 ஆயிரம் வரை விலைபோனால் மட்டுமே, வரும் காலங்களில் விவசாயிகள் மஞ்சள் சாகுபடி செய்வர். குவிண்டால், 7,000 ரூபாயை கூட தாண்டாததால், மஞ்சள் விவசாயிகள் பெரும் நஷ்டத்தை சந்திக்கிறோம். அரசே கூடுதல் விலையை நிர்ண யித்து, முழு அளவில் மஞ்சளை கொள்முதலை செய்தால், மஞ்சள் விவ சாயிகள் பாதிப்பை தவிர்க் கலாம், என்றார்.

## கோரை கட்டு ரூ.1,050க்கு குறைவாக விற்பதில்லை : உற்பத்தியாளர்கள் சங்க கூட்டத்தில் முடிவு

கரூர்: "ஐந்து முடி கொண்ட கோரை கட்டு, 1,050 ரூபாய்க்கு குறைவாக விற்கக் கூடாது,' என கோரை உற்பத்தியாளர்கள் சங்க ஆலோசனை கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

கரூர் மாவட்டத்தில், காவிரி ஆறு படுகைகளான வேலாயுதம்பாளையம், நொய்யல், நெரூர், வாங்கல், திருமுக்கூடலூர், நெரூர் தென்பாகம், நெரூர் வடபாகம் உள்ளிட்ட பகுதியில் கோரை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கடந்த சில வாரங்களாக, கோரை அறுவடை பணி தீவிரமாக நடக்கிறது. 1,050 ரூபாய்க்கு வாங்கப்பட்ட, ஆறு முடி கொண்ட ஒரு கட்டு கோரை, 750 ரூபாய்க்கு வியாபாரிகள் வாங்கியதால், கோரை விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

விவசாயிகளும், வியாபாரிகளும் ஒன்றிணைந்து கோரை விலை நிர்ணயிப்பது குறித்து, கரூர் மாவட்ட கோரை உற்பத்தியாளர்கள் சங்க ஆலோசனை கூட்டம், நெரூர் சதாசிவ பிரமேந்திராள் ஆலயத்தில் நடந்தது.

சங்க தலைவர் சின்னதுரை, தலைமை வகித்து கூறியதாவது:

கரூர் மாவட்டத்தில், நொய்யல் முதல் திருமுக்கூடலூர் வரை, 5,000க்கும் மேற்பட்ட விவசாயிகள், 10 ஆயிரம் ஏக்கரில் கோரை சாகுபடி செய்துள்ளனர். இது தவிர, நாமக்கல் மாவட்டம் வேலூர், மோகனூர், திருச்சி மாவட்டம், பெட்டவாய்த்தலை உள்ளிட்ட இடங்களில், 15 ஆயிரம் ஏக்கர் வரை கோரை சாகுபடி உள்ளது.

ஒரு ஏக்கர் கோரை சாகுபடி செய்ய ஆண்டுக்கு, ஆறு மூட்டை உரம் தெளிக்க வேண்டும். ஒரு மூட்டை உரம், 1,500 ரூபாய்க்கு வாங்கி வருகிறோம். களை எடுப்பு, தண்ணீர் பாய்ச்சுதல் ஆகிய உள்ளிட்ட பணிகளுக்கு, 10 ஆயிரம் ரூபாய் முதல், 15 ஆயிரம் ரூபாய் வரை செலவாகிறது. அதை தொடர்ந்து, கோரை அறுவடை செய்யும் போது, ஆறு முடி கொண்ட, ஒரு கட்டு கோரை அறுவடை செய்ய, 500 ரூபாய் கூலியாகிறது.

ஒரு ஏக்கர் கோரையில், 80 கட்டு முதல், 90 கட்டு வரை உற்பத்தியாகிறது. உற்பத்தி செலவு, கூலி ஆட்கள் செலவு அதிகரிப்பால், விவசாயிகளுக்கு லாபம் அதிகம் கிடைப்பதில்லை. இதன் காரணமாக, ஐந்து முடி கொண்ட ஒரு கட்டு கோரை, 1,050 ரூபாய்க்கு விற்பது, என விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் சேர்ந்து முடிவு செய்தோம். அதன்படி, ஒரு கட்டு கோரை, 1,050 ரூபாய் விற்கப்பட்டது.

இந்நிலையில், கடந்த இரண்டு மாதங்களாக, 50 இன்ச் கோரை ஒரு கட்டு, 750 ரூபாய்க்கு மட்டும் வியாபாரிகள் வாங்கியதால், விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்பட்டது. இதை தொடர்ந்து, 50 இன்ச் கோரை ஒரு கட்டு கோரை, 1,050 ரூபாய்க்கும், மார்பளவு கொண்ட ஒரு கட்டு கோரை, 750 ரூபாய்க்கும் விற்பது, என முடிவு செய்துள்ளோம். இவ்வாறு, அவர் கூறினார். கூட்டத்தில் செயலாளர் சுந்தரம், நிர்வாகிகள் முருகேசன், குணசீலன், பாண்டியன், சிதம்பரம் மற்றும் நெரூர் தென்பாகம், வடபாகம், திருமுக்கூடலூர் உள்ளிட்ட பகுதியை சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## காவிரி டெல்டா கடைமடை பகுதியில் குறுவை சாகுபடி பணிகள் துவக்கம்

வேதாரண்யம்: நாகை மாவட்டம், வேதாரண்யம் தாலுகாவில் கடைமடை பாசனப்பகுதியான வடமழை மணக்காடு, காரியாபட்டினம், பிராந்தியங்கரை, மூலக்கரை, தாணிக்கோட்டகம், தகட்டூர், தலைஞாயிறு, பிரிஞ்சுமுலை, மணக்குடி உள்ளிட்ட பகுதிகளில், 10 ஆயிரம் ஏக்கரில், காவிரி பாசன நீரை நம்பி, குறுவை சாகுபடி நடந்து வருகிறது ஆனால், கடந்த பத்து ஆண்டுகளுக்கும் மேலாக இங்குள்ள முள்ளியாறு, அரிச்சந்திராநதி போன்ற பாசன ஆறுகளும், மணக்காட்டான் வாய்க்கால், வடமழை வாய்க்கால், போன்ற கிளை வாய்க்கால்களும் தூர் வாரப்படாததால், மேட்டூர் தண்ணீர் கடைமடைக்கு ஒரு மாதம் காலதாமதமாக தண்ணீர் வந்து சேருவதாக விவசாயிகள் குற்றம் சாட்டுகின்றனர் இதனால் குறுவை சாகுபடி பணிகள் துவங்க காலதாமதமாகிறது

கடந்த மூன்று ஆண்டுகளாக, காலம் தவறி மேட்டூரில் தண்ணீர் திறப்பதால் குறுவை சாகுபடி செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. இரண்டு போகமாக இருந்த குறுவை சாகுபடி, கடந்த சில ஆண்டுகளாக, ஒரு போகமாக மாறி, தற்போது அந்த ஒரு போகமும் கேள்விக்குறியாக உள்ளது. இந்த ஆண்டில், காவிரி தண்ணீர் வரும் என்று நம்பிக்கையில்,

கடைமடை பகுதி விவசாயிகள் குறுவை சாகுபடிக்கு கோடை உழவு, உரம் இடுதல் உள்ளிட்ட பணிகளை செய்யத் துவங்கி உள்ளனர். இந்த ஆண்டும் குறுவை சாகுபடி பாதிக்கப்பட்டால், கடைமடை பகுதி விவசாயிகள், குறுவை சாகுபடியை கைவிட வேண்டிய நிலை எற்படும், என விவசாயிகள் கவலையுடன் தெரிவித்துள்ளனர்.

## கால்நடை கண்காட்சி நாளை துவக்கம்

ஒட்டன்சத்திரம்: ஒட்டன்சத்திரம் அருகேயுள்ள எஸ்.அத்திக்கோம்பையில் 119ம் ஆண்டு மாடு, குதிரைகள் கண்காட்சி நாளை துவங்குகிறது. ஆண்டுதோறும் ஆனி முதல்வாரத்தில், ஒட்டன்சத்திரம்-திண்டுக்கல் ரோட்டில் உள்ள எஸ்.அத்திக்கோம்பையில் உச்சிமாகாளியம்மன் கோவில் திருவிழா நடக்கிறது. இதை முன்னிட்டு கால்நடை கண்காட்சி நடக்கிறது. பல்வேறு பகுதிகளில் இருந்து கொண்டு வரப்படும் ஏராளமான மாடுகள், குதிரைகள் பங்கேற்கும். திருவிழா நாளை துவங்குவதாக அறிவிக்கப்பட்ட போதிலும், கடந்த இரண்டு நாட்களாக மாடுகள் வரத் துவங்கியுள்ளன. கோவை, ஈரோடு, திருப்பூர் பகுதியை சேர்ந்த காங்கேயம் காளைகள் அதிகமாக விற்பனைக்கு கொண்டு வரப்பட்டுள்ளன. புதுக்கோட்டை, திருச்சி மாவட்டங்களை சேர்ந்த விவசாயிகள் அதிகளவு மாடுகளை வாங்குவர். டிரஸ்ட்டிகள் தங்கமுத்து, ரவீந்திரன் கூறியதாவது: சங்கரண்டாம் பாளையம், பட்டகாரர் மாடுகள், விலை உயர்ந்த காங்கயம் காளைகள், கன்றுகள், ரேஸ் குதிரைகள், டான்ஸ் குதிரைகள் வர ஏற்பாடு செய்துள்ளோம். 32 ஆண்டுகளுக்கு முன்பு திண்டுக்கல் அங்குவிலாஸ் முத்தையா காளைகள், இடையகோட்டை, நெய்காரப்பட்டி ஜமீன் காளைகள், அதிகமாக இடம் பெற்றது. நாளை அதிகமான மாடுகள் வர உள்ளன, என்றனர்.

## பண்ணை குட்டைகளில் "பாலித்தீன் ஷீட்' விரித்து தண்ணீர் சேமிப்பு

சின்னமனூர்:விவசாய நிலங்களில் நீர் தேக்க அமைக்கப்படும் பண்ணை குட்டைகளில் கடினமான "பாலிதீன் ஷீட்' விரிப்பதால் தண்ணீர் வீணாவது தடுக்கப்படுகிறது. கூடுதல் பாசன வசதி கிடைப்பதால் ஏராளமான விவசாயிகள் இந்த முறையை பின்பற்றி வருகின்றனர். தேனி மாவட்டத்தில் 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இறவை பாசன கிணறுகள் மூலம் ஒரு லட்சம் ஏக்கரில் சாகுபடி நடக்கிறது. இந்த கிணறுகளுக்கு நீராதாரமாக உள்ள கண்மாய், காட்டாற்று ஓடைகளில் மணல் அள்ளி கடத்தப்பட்டதாலும், நீர் வரத்து பாதையில் உள்ள ஆக்கிரமிப்பாலும் நிலத்தடி நீர் மட்டம் சரிந்து விட்டது. பெரும்பாலான தோட்டங்களில் உள்ள கிணற்றில் இறைக்கப்படும் தண்ணீரில் 5 ஏக்கர் பாசன வசதி பெற்ற நிலை மாறி, ஒரு ஏக்கராக சுருங்கி விட்டது. இதற்கு முக்கிய காரணம் வாய்க்கால் அமைத்து கடத்தும் போது நீரை மண் உறிஞ்சு விடுவதால் பாசன பரப்பு குறைந்தது. தோட்டங்களில் சிறு பண்ணை குட்டை போல அமைத்து பகலில் நீர் தேக்கி இரவில் பாய்ச்சும் நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டனர். பண்ணை குட்டைகளிலும் தேங்கும் நீர் வீணாகாமல் தடுக்க பாலிதீன் தார்பாய் போல விரித்து வைக்கின்றனர்.

இதனால் நீர் உறிஞ்சுவது தடுக்கப்படுகிறது.விவசாயிகள் கூறுகையில், "பண்ணை குட்டையிலிருந்து நீர் கசிந்து வீணாவது, நீர் உறிஞ்சப்படுவது போன்ற பிரச்னைகளால் தண்ணீரை தேக்குவதில் சிக்கல் ஏற்பட்டது. கடினமான "பாலிதீன் ஷீட்'டை பண்ணை குட்டையில் விரித்து நீர் தேக்குவதால் இந்த பிரச்னைக்கு தீர்வு கிடைத்துள்ளது.தேங்கும் நீரை வைத்து கூடுதல் பாசன வசதி செய்ய முடிவதால், பெரும்பாலான விவசாயிகள் இந்த முறைக்கு மாறி வருகின்றனர்,' என்றனர்.

## மரங்களை வளர்ப்போம்... ஒலி ஆற்றலை கிரகிப்போம்

இன்றைய அறிவியல் உலகின் புதிய கண்டு பிடிப்புகளின் பயனாக நவீன இயந்திரங்கள், புதிய தொழில் நுட்பக்கண்டு பிடிப்புகள் வளர்ந்து வருகின்றன. இவை மனித இனத்திற்கு நல் பயனை தந்தாலும் பல

வகையில் சுற்றுச்சுழல் மாசுக்கு வழி வகுக்கிறது. தற்போது உலகெங்கும் பெரும் பாதிப்பு தரக்கூடியதாக வளர்ந்து வருகிறது இரைச்சல் . சிவகாசி போன்ற தொழில் நகரங்களில் இந்த பாதிப்புகள் வளர துவங்கி உள்ளன. முன்பெல்லாம் இரைச்சல் என்பது தொழிலகங்களுக்கு மட்டுமே பொருந்துவதாக இருந்தது. ஆனால் இன்று பெருகி வரும் மக்கள் தொகை, நெரிசல் மிக்க போக்குவரத்து , மனமகிழ்வுக் கூடங்கள், பொழுது போக்கு மையங்கள் என எல்லா இடங்களிலும் இரைச்சல் பெருகி வருகிறது.

இரைச்சல் உள்ள சூழ்நிலையில் வாழ்வோருக்கு மனநலம் பாதிப்பு, சுறுசுறுப்பு குறைப்பு, வேலை செய்யும் திறன் இழப்பு, வாழ்வை அனுபவிக்கும் திறன் இழப்பு ஆகிய விளைவுகளை ஏற்படுத்துகிறது. அதிக அளவில் இரைச்சல் தொல்லைக்கு உட்பட ஒருவரின் காது செவிடாகிறது. கோபம், வெடுவெடுப்பு, ரத்த அழுத்தம், இதயத் துடிப்பு அதிகரிப்பு, சுவாச வீதம் அதிகரிப்பு, நரம்புக்கோளாறு போன்ற விளைவுகள் ஏற்படுகின்றன. தாவரங்கள், விலங்குகள், கட்டடங்கள் ஆகியவற்றிலும் இரைச்சலில் பாதிப்புகள் அறியபட்டுள்ளன.

இரைச்சல் மாசு அதிகம் நிகழும் இடமாக சிவகாசி திகழ்கிறது. குறிப்பாக பஸ் நிலையம், என்.ஆர்.கே.,ரோடு, புதுரோடு, பஜார் பகுதி, 4 ரதவீதிகள் போன்ற பல மெயின் பகுதிகளில் இரைச்சலின் அச்சுறுத்தல் தொடர்கிறது. இந்த இடங்களில் எல்லாம் போக்குவரத்து இடையூறு ஏற்பட்டு டூவீலர் ஹாரன் சத்தம், சந்தை சத்தம், கார், கனரக வானகங்களில் சத்தம் போன்ற பல ரீதியான இரைச்சல் இங்கு மாசு ஏற்பட வழி வகுக்கின்றன. வீடுகளில் இயக்கப்படும் தொலைக்காட்சி, ரேடியோ, தொலைபேசி, இசைக்கருவிகள், மின் விசிறி, துணி துவைக்கும் இயந்திரங்கள், மிக்சி, பிரஷ்ஷர் குக்கர் போன்றவை எழுப்பும் ஒலிகள் இரைச்சலின் மூல ஆதாரங்களாக உள்ளன. நகரத்தின் முக்கிய பகுதிகளில் போக்குவரத்து வாகனங்களின் ஒலி அளவை குறைத்து ஏர் ஹார்ன் ஒலிப்பதை தவிர்க்கலாம்.தேவை இல்லாத இடத்தில் ஒலி எழுப்புவதை தவிர்க்க வேண்டும். மரங்கள் ஒலி ஆற்றலை கிரகித்து

சிதறடிக்கூடிய வல்லமை பெற்றுள்ளன. நெடுஞ்சாலை, தெருவோரம் மற்றும் தொழிற் சாலை பகுதிகளில் நெட்டிலிங்கம், வேப்பமரம், புளியமரம், தென்னை போன்ற மரங்களை வளர்த்து ஒலி கிரகிக்கும் அமைப்பாக மாற்றலாம்.

தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**தமிழகம், புதுவையின் சில இடங்களில் இன்று மழை பெய்யும்: வானிலை அறிவிப்பு**

தமிழகம், புதுவையின் சில இடங்களில் திங்கள்கிழமை மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கேரளம், கர்நாடகம் உள்ளிட்ட மாநிலங்களில் தென்மேற்கு பருவமழை பெய்து வரும் நிலையில், தமிழகத்தில் வெப்பச் சலனத்தின் காரணமாக சில இடங்களில் மழை பெய்து வருகின்றது. இந்த நிலையில் திங்கள்கிழமையும் சில இடங்களில் மழை பெய்யும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் ஞாயிற்றுக்கிழமை காலை வரையிலான 24 மணி நேரத்தில் குழித்துறையில் 40 மி.மீ. மழையும் திருச்சியில் 30 மி.மீ. மழையும் பெய்துள்ளது. வேலூர், காவேரிப்பாக்கம், தக்களை, பாலக்கோடு, ஒகேனக்கல், ஒரத்தநாடு, வாலாஜாவில் 20 மி.மீ. மழையும் மன்னார்குடி, நாகர்கோயில், குளச்சல், வால்பாறையில் 10 மி.மீ. மழையும் பெய்துள்ளது.

**தென்மேற்குப் பருவமழை 5 சதவீதம் அதிகம் பெய்துள்ளது: வானிலை ஆய்வு மையம் தகவல்**



நிகழாண்டில் தென்மேற்குப் பருவமழை குறைவாகப் பெய்யும் என்று கணிக்கப்பட்ட நிலையில், நாடு முழுவதும் கடந்த 2 வாரத்தில் வழக்கத்தை விட 5 சதவீதம் அதிகம் மழை பெய்துள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது.

மகாராஷ்டிரம், மத்தியப் பிரதேசம், ஒடிஸா உள்ளிட்ட மாநிலங்களில் பெய்துவரும் பருவமழை, அடுத்த 3 நாள்களில் நாட்டின் பிற பகுதிகளிலும் தொடங்கும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து தில்லியில், இந்திய வானிலை ஆய்வு மைய வட்டாரங்கள் தெரிவித்ததாவது:

கடந்த 1-ஆம் தேதி முதல் ஞாயிற்றுக்கிழமை வரை, நாடு முழுவதும் ஒட்டுமொத்தமாக 5.4 செ.மீ. பருவமழை பெய்துள்ளது. இந்தக் காலகட்டத்தில் வழக்கமாக 5 செ.மீ. மழை பெய்யும் நிலையில், இது 5 சதவீதம் அதிகமாகும். இதில், அதிகபட்சமாக நாட்டின் கிழக்கு மற்றும் வடகிழக்குப் பகுதிகளில் 22 சதவீதம் கூடுதல் மழை பதிவாகியுள்ளது.

அதேசமயம், நாட்டின் மத்திய மற்றும் வடமேற்குப் பகுதிகளில் வழக்கத்தைவிட முறையே 6 சதவீதம், 10 சதவீதம் என்ற அளவுக்கு மழை குறைவாக பெய்துள்ளது. இதேபோன்று கோவா, கொங்கண் பகுதிகளிலும் வழக்கத்தைவிட 45 சதவீத அளவுக்கு குறைவாக மழை பதிவாகியுள்ளது.

மகாராஷ்டிரம், மத்தியப் பிரதேசம், ஒடிஸாவின் சில பகுதிகளில்

தற்போது பெய்துவரும் பருவமழை, குஜராத், மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களிலும், சத்தீஸ்கர், ஒடிஸா மாநிலங்களின் பெரும்பாலான இடங்களிலும் அடுத்த 3 நாள்களில் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேபோன்று, அரபிக்கடலின் வடக்கே அமைந்துள்ள பகுதிகள், வங்கக் கடலின் வடமேற்குப் பகுதிகள், கடலோர ஆந்திரம், பிகார் மற்றும் ஜார்க்கண்ட் மாநிலங்களின் சில பகுதிகள் ஆகிய இடங்களிலும் சில நாள்களில் பருவமழை தொடங்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது என்று வானிலை ஆய்வு மைய வட்டாரங்கள் தெரிவித்தன.

மும்பையில் 8 செ.மீ. மழை: இதனிடையே, நிகழ் பருவமழைக் காலத்தில், கடந்த 2 வாரங்களில் மும்பை புறநகர்ப் பகுதிகளில் 12 செ.மீ. மற்றும் மும்பை நகரில் 8 செ.மீ. மழை பெய்துள்ளது. மும்பை நகரில் ஞாயிற்றுக்கிழமை முழுவதும் விட்டுவிட்டு பெய்த மழை, அடுத்த 24 மணிநேரத்துக்கு தொடரும் என்று அந்த நகர வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது.

ஒடிஸா, மத்தியப் பிரதேசத்தில் பருவமழை: ஒடிஸாவில் மல்கான்கிரி, நவ்ரங்பூர், கோராபுட், காலாஹண்டி உள்ளிட்ட மாவட்டங்களில் கடந்த 2 நாள்களாக மழை பெய்து வருகிறது. மாநிலத்தின் பெரும்பாலான இடங்களில் அடுத்த 3 நாள்களில் பருவமழை தீவிரமடையும் என்று புவனேசுவரம் வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது.

போபால், இந்தூர், குவாலியர், ஜபல்பூர் உள்பட மத்தியப் பிரதேச மாநிலத்தின் பல பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமை பரவலாக மழை பெய்தது. அதிகபட்சமாக ராஜ்கர் மாவட்டத்தின் நரசிங்கர் பகுதியில் 8 செ.மீ. மழை பதிவானதாக அந்த மாநில வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது.

சிங்கவால் குரங்குகளின் எண்ணிக்கை24 -ஆக உயர்வு



சிங்கவால் குரங்கு இனப் பெருக்கத்தில் வண்டலூர் உயிரியல் பூங்காவில் சாதனை செய்யப்பட்டுள்ளது. அங்கு அண்மையில் அரிய வகை சிங்கவால் குரங்கு, குட்டி ஒன்றை ஈன்றது. இதையடுத்து உயிரியல் பூங்காவில் சிங்கவால் குரங்குகளின் எண்ணிக்கை 24 ஆக உயர்ந்துள்ளது.

இதுகுறித்து பூங்கா நிர்வாகம் சனிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு: வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் பராமரிக்கப்பட்டு வரும் அஞ்சலி (6) என்ற பெண் சிங்கவால் குரங்கும், அசோக் (8) என்ற ஆண் சிங்கவால் குரங்கும் இணைந்து மார்ச் 23-ஆம் தேதி குட்டி ஒன்றை ஈன்றன.

குட்டியின் பாலினம் வளர்ந்த பிறகே தெரியவரும். இத்துடன் பூங்காவிலுள்ள சிங்கவால் குரங்குகளின் எண்ணிக்கை 24-ஆக உயர்ந்துள்ளது.

சிங்கத்தின் வால் நுனியில் கொத்தாக முடியிருப்பது போல், இந்தக் குரங்கின் வால் இருப்பதால் "சிங்கவால் குரங்கு' என்று அழைக்கப்படுகிறது.

இந்தக் குரங்கு பெரும்பாலும் சோலைக் காடுகளில் காணப்படுவதால் "சோலை மந்தி' என்றும் அழைக்கப்படுகிறது.

சிங்கத்தின் பிடரியைப் போன்ற முகம், வால், கருமை நிறம் ஆகியவற்றால் பெரும்பான்மை பார்வையாளர்களைக் கவரும் இந்தக் குரங்கு, அழிந்து வரும் அரிய உயிரினமாகும். உலகிலேயே மேற்கு

தொடர்ச்சி மலையில் தமிழ்நாடு, கேரளம், கர்நாடக மாநிலங்களில் மட்டுமே இந்தக் குரங்குகள் காணப்படுகின்றன.

இந்தக் குரங்குகளின் வாழ்விடங்களான பசுமை மாறாக் காடுகள் பெருமளவில் அழிக்கப்பட்டு தோட்டப் பயிர்கள் பயிரிடப்படுவதால் இந்தக் குரங்குகளின் எண்ணிக்கை பெருமளவில் குறைந்தது.

எனவே, இந்த உயிரினத்தை அழிவிலிருந்து காக்கும் பொருட்டு அடைப்பிட இனப்பெருக்கம் செய்ய முடிவு செய்யப்பட்டது. அதன்படி வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா, இனப்பெருக்க ஒருங்கிணைப்புப் பூங்காவாக மத்திய உயிரியல் பூங்கா ஆணையத்தால் தேர்வு செய்யப்பட்டது.

மேலும், மைசூர், திருவனந்தபுரம் பூங்காக்கள் இனப்பெருக்க பங்கேற்பு பூங்காவாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இந்தத் திட்டப்படி பார்வையாளர் வருகை புரியாத இடத்தில், இயற்கையான காட்டுப் பகுதியில் இரண்டு அடைப்பிடங்கள் ஏற்படுத்தப்பட்டு ஓர் ஆண், இரண்டு பெண் கொண்ட இரண்டு குழுக்கள் தேர்வு செய்யப்பட்டு மேற்படி அடைப்பிடங்களில் விடப்பட்டன.

திறந்தவெளி அடைப்பிடத்தில் இயற்கையாக வளர்ந்துள்ள மரங்களுடன் ஆல், அரசு, மா, பலா, வேம்பு, நெல்லி, இலுப்பை, கொடுக்காப்புளி போன்ற மரங்களும், செடி, கொடிகளும் நடப்பட்டன.

விலங்கு இல்லத்தில் குரங்குகள் நடமாடுவதற்குத் தகுந்தவாறு மரக்கிளைகள், கயிறுகள், பலகைகள் ஆகியவற்றைக் கொண்டு சுற்றுச்சூழலை வளமைப்படுத்தும் பணிகள் செய்யப்பட்டன. இதனால் இயற்கையான சூழ்நிலையில் வாழ்விடம் அமையப்பெற்றதால் சிங்கவால் குரங்குகள் விரைவாக இனப்பெருக்கம் செய்கின்றன.

இந்தத் திட்டத்தின் கீழ் முதன்முதலாக அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவுக்கு வால்பாறை சோலைக்காடுகளிலிருந்து 1990-இல் ஒரு ஆண், மூன்று பெண் குரங்குகளும், 1999-இல் ஒரு பெண் குரங்கும் கொண்டு வரப்பட்டன.

இந்த நான்கு குரங்குகளும் அதன் வழித்தோன்றல்களும் இனப்பெருக்கம் செய்து இதுவரை 48 குட்டிகளை ஈன்றுள்ளன.

அடைப்பிட இனப்பெருக்க முறையில் இந்த எண்ணிக்கை தேசிய அளவில் மிகப் பெரிய சாதனையாகும்.

இங்கு பிறந்த சிங்கவால் குரங்குகள் விலங்குகள் பரிமாற்ற முறையில் குவாஹாட்டி, சிம்லா, தில்லி, திருவனந்தபுரம், மைசூர், ஹைதராபாத், பரோடா, கிண்டி ஆகிய இடங்களில் உள்ள உயிரியல் பூங்காக்களுக்குக கொடுக்கப்பட்டுள்ளன.

**மழையால் நிரம்பியது மிட்டாளம் கொச்சேரி ஏரி**

ஆம்பூர் பகுதியில் கடந்த சில நாள்களாகப் பெய்த பலத்த மழையால் மிட்டாளம் கொச்சேரி ஏரி நிரம்பியுள்ளது.

கோடைக் காலத்தில் ஆம்பூரில் மிகக் கடுமையான வெயில் காய்ந்தது. வெயிலின் தாக்கத்தால் அனல் காற்று வீசியது. ஆனால் கடந்த சில நாள்களாக ஆம்பூர் பகுதியில் விடாமல் 3 நாள்கள் பலத்த மழை பெய்தது. அதனால் ஆம்பூர் கம்பிக்கொல்லை ஆனைமடுகு தடுப்பணை, மிட்டாளம் ஊராட்சி பைரப்பல்லி அருகேயுள்ள கொச்சேரி ஏரி ஆகியவற்றில் தண்ணீர் நிரம்பியுள்ளன.

இதனால் அந்தப் பகுதிக்கு இரு சக்கர வாகனத்தில் இளைஞர்கள், அந்தப் பகுதி சிறுவர்கள் சென்று தண்ணீரில் குதித்து விளையாடி மகிழ்ந்தனர்.

ஆனால், எச்சரிக்கையாக விளையாடாமல் அஜாக்கிரதையாக விளையாடுகின்றனர். இதனால் ஆபத்து ஏற்படக்கூடிய சூழ்நிலை உள்ளது. அதனால் பொதுப்பணித் துறை ஆனைமடுகு அணை, மிட்டாளம் கொச்சேரி ஏரி பகுதிகளில் தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்ய வேண்டுமென கிராம மக்கள் கூறினர்.

**ஏக்கருக்கு 200 இலவச மரக்கன்றுகள் அளிப்பு**

திருவண்ணாமலை மாவட்டத்தில் தனியார் நிலங்களில் வளர்ப்பதற்காக ஏக்கருக்கு 200 மரக்கன்றுகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. ஊக்கத் தொகையுடன் கூடிய இந்தத் திட்டத்தில் பயன்பெற விரும்புவோர் வனத் துறையை தொடர்பு கொண்டு பயன்பெறலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு உயிர்பன்மை பாதுகாப்பு, பசுமையாக்குதல் திட்டத்தின் கீழ் தனியார் நிலங்களில் மரங்கள் வளர்க்கப்பட்டு வருகிறது. அதன்படி, குறு

விவசாயிகள் (2.5 ஏக்கர் வரை), சிறு விவசாயிகள் (2.5 முதல் 5 ஏக்கர் வரை), சுய உதவிக் குழுக்களுக்கு இந்தத் திட்டத்தில் முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

பெரு விவசாயிகள் அதிகபட்சம் 12.50 ஏக்கர் வரை மரக்கன்றுகள் நட்டுப் பயன்பெறலாம். இந்தத் திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமப் பகுதிகளில் ஆர்வமுள்ள பயனாளிகளுக்கு அந்தப் பகுதியில் மண்ணின் தன்மைக்கு ஏற்ப செழித்து வளரக்கூடிய மரங்கள், பயனாளிகளுக்கு லாபம் தரக்கூடியதும், சந்தை வாய்ப்பு, தொழிற்சாலைகள் தேவைகளை கருத்தில் கொண்டு மர வகைகள் தேர்வு செய்யப்படும்.

பயனாளிகளுக்கு ஒரு ஏக்கருக்கு 200 மரக்கன்றுகள் வீதம் இலவசமாக வழங்கப்படும். மரக்கன்றுகளை முழு பரப்பிலும், வரப்பு ஓரமாகவும், ஊடு பயிர் செய்ய உகந்த முறையில் நடவு செய்யலாம். நடவு மேற்கொண்ட பயனாளிகளுக்கு 3-ஆவது வருடத்தில் உயிர்ச் செடிகளின் எண்ணிக்கை அடிப்படையில் ஊக்கத் தொகை வழங்கப்படும்.

இந்தத் திட்டத்தின் கீழ் 2014-15-ம் ஆண்டில் 3,15,000 மரக்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டுத் திட்டக் கிராமங்களில் விநியோகம் செய்யப்பட உள்ளன. இந்தத் திட்டம் மூலம் பயனடைய விரும்பும் விவசாயிகள் திருவண்ணாமலை வனவியல் விரிவாக்க கோட்ட அலுவலகத்தை 04175-295384, திருவண்ணாமலை வனவியல் விரிவாக்க அலுவலரை 9487012071, திருவண்ணாமலை வனச்சரகரை 9787526773, 9751105342, வனத்துறை தொழில்நுட்ப உதவியாளரை 9442457134 என்ற எண்களில் தொடர்பு கொண்டு பயன்பெறலாம் என்று வனத்துறை தெரிவித்துள்ளது.

**ஒகேனக்கல்லுக்கு சுற்றுலா பயணிகள் வருகை அதிகரிப்பு**

தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல் அருவிக்கு விடுமுறை நாளான ஞாயிற்றுக்கிழமை சுற்றுலாப் பயணிகள் வருகை அதிக அளவில் இருந்தது.

தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம், நாமக்கல், திருவண்ணாமலை, பெங்களூரு, ஆந்திர மாநிலம் குப்பம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில்

இருந்து ஒகேனக்கல் அருவிக்கு சுமார் 25,000-க்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் தங்களது குடும்பத்துடன் சுற்றுலா வந்தனர்.

பிரதான நீர்வீழ்ச்சி, சிற்றருவி, ஊட்டமலைப் பகுதி உள்ளிட்ட இடங்களில் சுற்றுலாப் பயணிகள் குடும்பத்துடன் குளித்து மகிழ்ந்தனர். மேலும், அங்குள்ள வண்ண மீன் கண்காட்சி, முதலைப் பண்ணை ஆகியவற்றையும் பார்வையிட்டனர்.

சுற்றுலாப் பயணிகள் தங்களது குடும்பத்தினருடன் பரிசல் சவாரி செய்து பெரியபாணி, ஐந்தருவி, மணல்திட்டு, மாறுகொட்டாய், கர்நாடகப் பகுதியில் உள்ள அருவி உள்ளிட்ட இடங்களுக்குச் சென்று காவிரி ஆற்றின் அழகையும், கொட்டும் நீர்வீழ்ச்சியையும் கண்டு ரசித்தனர்.

நீர் வரத்துக் குறைவு: ஒகேனக்கல் அருவியில் தற்போது நீர்வரத்து வெகுவாகக் குறைந்துள்ளது.

இதனால், தண்ணீர் பெருக்கெடுத்து ஓடிய ஆற்றுப் பகுதி தற்போது பாறைகளாக காட்சியளிப்பது குறிப்பிடத்தக்கது.

**ஆத்தூர் உழவர் சந்தையில் விழிப்புணர்வுக் கூட்டம்**

ஆத்தூர் உழவர் சந்தையில் வேளாண் விற்பனை, வேளாண் வணிகத் துறை சேலம் விற்பனைக்குழு சார்பில் விழிப்புணர்வுக் கூட்டம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இந்தக் கூட்டத்துக்கு சேலம் விற்பனைக் குழுச் செயலர் எஸ்.செல்லதுரை தலைமை வகித்து, விவசாயிகள் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை பயன்படுத்துவது, அதனால் ஏற்படும் பயன்கள் குறித்து விளக்கிப் பேசினார்.

கூட்டத்தில் வேளாண் விற்பனை ஒருங்கிணைப்பு குழுவைச் சேர்ந்த எஸ்.கைலாசம், மேற்பார்வையாளர் சேரலாதன், உழவர் சந்தை அலுவலர்கள் தனபால், சீனிவாசன், விவசாய சங்கத் தலைவர் எஸ்.கோவிந்தராஜ் உள்பட விவசாயிகள், வியாபாரிகள் கலந்து கொண்டனர்.

**வெப்பத்தை தணித்தது திடீர் மழை!**

தலைநகர் தில்லியில் ஞாயிற்றுக்கிழமை இதமான வானிலை நிலவியது. சனிக்கிழமை பிற்பகலில் வீசிய புழுதிக் காற்றைத் தொடர்ந்து பெய்த திடீர் மழை காரணமாக வெப்பம் தணிந்தது. இதன் காரணமாக விடுமுறை நாளான ஞாயிற்றுக்கிழமை நகரில் பூங்காக்கள், ஹோட்டல்கள் ஆகியவற்றில் மக்கள் கூட்டம் அதிகமாகக் காணப்பட்டது.

வாரத்தின் தொடக்கம் முதல் தில்லியில் வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்து வந்தது. மேலும், அனல் காற்று வீசியதால் பொதுமக்கள் பெரும் சிரமத்துக்குள்ளாகினர். இந்த நிலையில், வெள்ளி, சனி ஆகிய இரு தினங்களிலும் வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது. சனிக்கிழமை காலையில் வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்த போதிலும், நகரின் பல்வேறு பகுதிகளில் பிற்பகலில் புழுதிக் காற்றுடன் (ஆந்தி) பலத்த மழை பெய்தது. இது, கடந்த சில நாள்களாக வெயிலின் தாக்கத்தால் தவிப்புக்குள்ளாகியிருந்த தில்லிவாசிகளுக்கு மகிழ்ச்சியை அளித்தது.

இதைத் தொடர்ந்து, ஞாயிற்றுக்கிழமை அதிகாலையிலும் நகரில் ஆங்காங்கே லேசான மழை பெய்தது. காலை முதல் வெயிலின் தாக்கம் குறைந்து காணப்பட்டது. தொடர்ந்து இதமான வானிலை நிலவியது. காலை 8.30 மணி நிலவரப்படி சராசரியாக 25.7 மி.மீட்டர் மழை பெய்துள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. அதிகபட்சமாக ஆயாநகரில் 51.7 மி.மீ., மழை பதிவாகியுள்ளது. பாலத்தில் 37, லோதி சாலையில் 24.8, சஃப்தர்ஜங்கில் 25.7, தில்லி பல்கலை.யில் 15, பிதம்புராவில் 8, பூசா 17, அக்ஷர்தாமில் 13, குர்கான் வானிலை ஆய்வு மையத்தில் 37 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

தில்லியில் ஞாயிற்றுக்கிழமை குறைந்தபட்ச வெப்பநிலை இந்தப் பருவத்தின் சராசரியை விட 7 டிகிரி குறைந்து 20.5 டிகிரியாகப் பதிவாகியுள்ளது. இதேபோல் அதிகபட்ச வெப்பநிலையும் 38 டிகிரியாகக் குறைந்தது. இது கடந்த வாரத்தில் 44 டிகிரி செல்சியஸ் வரை சென்று இந்தப் பருவத்தின் அதிகபட்ச வெப்பநிலையைப் பதிவு செய்தது குறிப்பிடத்தக்கது. மேலும், காற்றில் ஈரப்பதம் காலை 8.30 மணி

நிலரப்படி 100 சதவீதமாக இருந்தது. இதனால், வாரத்தின் கடைசி நாளான ஞாயிற்றுக்கிழமை காலை முதல் மாலை வரை வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டதுடன் நாள் முழுவதும் இதமான வானிலை நிலவியது என்று வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

சாய்ந்த மரங்கள் அகற்றம்: இதனிடையே, சனிக்கிழமை வீசிய கடும் புழுதிக் காற்றால் நகரின் பல்வேறு இடங்களில் சாலைகளில் சாய்ந்த மரங்கள் அகற்றப்பட்டு விட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

**மஞ்சவிளையில் ரூ.1.95 லட்சத்தில் சிறுமின்விசை குடிநீர்த் தொட்டி**

களியக்காவிளை அருகே மஞ்சவிளையில் அமைக்கப்பட்ட சிறுமின்விசைத் திட்ட குடிநீர்த் தொட்டியை விளவங்கோடு எம்.எல்.ஏ. எஸ். விஜயதாரணி திறந்துவைத்தார்.

வன்னியூர் ஊராட்சி, மஞ்சவிளையில் குடிநீர் தட்டுப்பாடு நிலவியதால் மேல்புறம் ஊராட்சி ஒன்றியத் தலைவர் ஜார்ஜ் மற்றும் அப்பகுதி மக்கள் சிறுமின்விசைத் திட்ட குடிநீர்த் தொட்டி அமைக்குமாறு விளவங்கோடு தொகுதி எம்.எல்.ஏ. விஜயதாரணியிடம் கோரிக்கை விடுத்தனர். இதையேற்று தனது தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.1.95 லட்சத்தை அவர் ஒதுக்கீடு செய்தார்.

இதையடுத்து குடிநீர்த் தொட்டி அமைக்கப்பட்ட நிலையில், அதனை பொதுமக்கள் பயன்பாட்டுக்காக எம்.எல்.ஏ. விஜயதாரணி திறந்துவைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மேல்புறம் ஊராட்சி ஒன்றியத் தலைவர், விளவங்கோடு தொகுதி இளைஞர் காங்கிரஸ் பொதுச் செயலர் சந்தோஷ், வட்டார இளைஞர் காங்கிரஸ் தலைவர் பினில்முத்து, வன்னியூர் ஊராட்சி உறுப்பினர்கள் ஜாண்ஜெபராஜ், லிசி, ஜெயசுதா, குழித்துறை நகர காங்கிரஸ் தலைவர் அருள்ராஜ், மேல்புறம் வட்டார காங்கிரஸ் செயலர் ராஜ், இடைக்கோடு பேரூராட்சி உறுப்பினர் சுரேஷ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**ஜூன் 17-ல் பருத்தி ஏலம்**

துறையூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ஜூன் 17-ம் தேதி பருத்தி ஏலம் நடைபெறும் என ஆட்சியர் கே.எஸ். பழனிச்சாமி தெரிவித்துள்ளார்.

திருச்சி மாவட்டத்தில் 16,453 ஹெக்டேரில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. பருத்தி அறுவடையையொட்டி, டிச 24-ம் தேதி முதல் துறையூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் வாரம் ஒரு நாள் வீதம், பருத்தி மறைமுக ஏலம் நடைபெறுகிறது.

கடந்த 10-ம் தேதி நடைபெற்ற மறைமுக ஏலத்தில் நல்லியம்பாளையம், திருத்தலையூர், ஏரகுடி, வளையடுப்பு உள்பட 8 கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகளும், நாமக்கல், பெரம்பலூர், துறையூர், பேட்டைவாய்த்தலை, எதுமலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த வியாபாரிகளும் ஏலத்தில் பங்கேற்றனர். இதில், 770 கிலோ பருத்தி ரூ. 28,701 விலையில் விற்பனையானது.

அடுத்த ஏலம் வரும் புதன்கிழமை (ஜூன் 17) நடைபெறுகிறது. துறையூர், உப்பிலியபுரம், தாத்தையங்கார்பேட்டை, முசிறி, மண்ணச்சநல்லூர் வட்டாரங்களைச் சேர்ந்த பருத்தி விவசாயிகள், இந்த ஏலத்தில் பங்கேற்று எவ்வித தரகும் இல்லாமல், தங்கள் பருத்தியை நல்ல விலையில் விற்பனை செய்து பயன்பெறலாம் என ஆட்சியர் தனது செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

**பண்ணைக்குட்டையில் மீன் வளர்த்து அதிக லாபம் பெற யோசனை**

அரியலூர் மாவட்டத்தில் மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் பண்ணைக்குட்டைகள் அமைத்து மீன் வளர்ப்பதன் மூலம் விவசாயிகள் அதிக லாபம் பெறலாம் என்றார் மாவட்ட உதவி திட்ட இயக்குநர்(ஊராட்சிகள்) கங்காதாரணி.

அரியலூர் மாவட்டம்,அஸ்தினாபுரம் ஊராட்சியில் நடப்பாண்டில்(2015 - 16) பண்ணைக்குட்டைகள் அமைக்கப்பட்டுள்ள இடங்களை ஞாயிற்றுக்கிழமை அவர் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும், இதுகுறித்து அவர் கூறும் போது:

வேளாண்மைத் துறை சார்பில் பண்ணைக்குட்டைகள் அமைக்க பயனாளிகள் தேர்வு செய்யப்படுவர். பின்னர் கிராம ஊராட்சி மூலம் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் வரும் தொழிலாளர்கள் மூலம் 15 செ.மீ. நீளம் * 15 செ.மீ. அகலம் கொண்ட குட்டை வெட்டப்படும். இதனை அனைத்து விவசாயிகளும் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார் அவர்.

பின்னர், இதுகுறித்து பண்ணைக்குட்டை அமைத்த விவசாயிகளிடம் கேட்ட போது, கடந்த சில மாதங்களுக்கு முன்பு பெய்த மழைநீரில் மீன் குஞ்சுகள் விடப்பட்டு தற்போது மீன்கள் இனப்பெருக்கம் அடைந்து நல்ல பருவத்தை அடைந்துள்ளது. தற்போது, கெண்டை, கெளுத்தி, ஜிலேபி, கட்லா போன்ற மீன்கள் கிலோ ரூ.150-க்கு விற்பனை செய்யப்படுகிறது. மேலும்,ஒரு நாளைக்கு ஆயிரம் கிலோ வரை மீன்கள் பிடிக்கப்பட்டு வெளியூர்களில் விற்பனை செய்கிறோம். இதில், எங்களுக்கு நல்ல லாபம் கிடைக்கிறது என்றனர்.

ஆய்வின்போது ஒன்றிய ஆணையர் சேகர், ஊராட்சித்தலைவர் ராஜாத்தி சிவகாமி, ஊராட்சிச் செயலர் இளங்கோவன் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

**அரியலூர் மாவட்டத்தில் வேளாண் சேவை மையங்கள் மூலம் இயந்திரங்கள் வாடகைக்கு பெறலாம்**

அரியலூர் மாவட்டத்தில் வேளாண் சேவை மையங்கள் மூலம் விவசாயிகள் வேளாண் இயந்திரங்களை வாடகைக்குப் பெறலாம் என்றார் அரியலூர் மண்டல இணைப் பதிவாளர் எஸ். பாபு.

இதுகுறித்து, அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: அரியலூர் மாவட்டத்தில் செயல்படும் தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களில் செயல்படும் வேளாண் சேவை மையங்களின் மூலம் வேளாண்மை இயந்திரங்களான டிராக்டர், பவர் டில்லர், ஆகியவை குறைந்த வாடகைக்கு விவசாயிகளுக்கு அளிக்கப்படுகிறது.

டிராக்டர் 1 மணி நேரத்துக்கு கொக்கி கலப்பை, ரொட்டவேட்டர் ஆகியவைகளுக்கு ரூ. 500 எனவும், சட்டி கலப்பைக்கு ரூ. 450 எனவும்

மற்றும் பவர் டில்லர் 1 மணி நேரத்துக்கு ரூ.300 எனவும் வாடகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேலும் விபரங்களுக்கு, அருகில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தினை விவசாயிகள் தொடர்பு கொள்ளுமாறும் அந்தச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**ஆனைமலை அருகே குளப்பத்துக்குளத்தில் இருந்து தண்ணீர் திறப்பு 300 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்**

ஆனைமலை அருகே குளப்பத்துக்குளத்தில் இருந்து நேற்று தண்ணீர் திறக்கப்பட்டது. இதன் மூலம் 300 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன.

குளப்பத்துக்குளம்

ஆனைமலையை அடுத்துள்ள காளியாபுரம் பகுதியில் குளப்பத்துக்குளம் அமைந்துள்ளது. இந்த குளம் 150 ஏக்கர் பரப்பளவில் பரந்து விரிந்து காணப்படுகிறது. இதன் மூலம் 300 ஏக்கர் விவசாய நிலங்கள் நேரடியாக பாசன வசதி பெறுகின்றன.

பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில் உள்ள இந்த குளத்தை தற்போது விவசாயிகள் பராமரித்து வருகிறார்கள். கடந்த மாதம் பெய்த மழையின் காரணமாக குளம் நிரம்பியது. இதையடுத்து முதல்போக சாகுபடிக்கு ஆயத்த பணிகளில் விவசாயிகள் ஈடுபட்டு வந்தனர். தற்போது

பாசனத்துக்காக குளத்தில் இருந்து தண்ணீர் திறக்க விவசாயிகள் முடிவு செய்தனர்.

தண்ணீர் திறப்பு

இதன்படி முதல் போகத்துக்கு நாற்று நடுவதற்காக நேற்று குளத்தில் இருந்து தண்ணீர் திறக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு குளப்பத்துக்குளம் பாசன சபை தலைவர் செல்வகுமார் தலைமை தாங்கினார். துணை தலைவர் முருகேசன் முன்னிலை வகித்தார். இதையடுத்து சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டு தண்ணீர் திறக்கப்பட்டது. தொடர்ந்து கால்வாயில் பாய்ந்தோடிய தண்ணீரில் விவசாயிகள் மலர் தூவினார்கள். நிகழ்ச்சியில் குளப்பத்துக்குளம் பாசன விவசாயிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

இது குறித்து விவசாயிகள் கூறியதாவது:-

குளப்பத்துக்குளம் மூலம் இரு போகம் பாசனம் நடைபெற்று வருகிறது. இந்த குளத்தின் கரையிலும், மத்திய பகுதியிலும் கருவேல மரங்கள் ஆக்கிரமித்து அதிகளவில் வளர்ந்துள்ளன. இதனால் அதிக அளவில் தண்ணீர் வீணாகிறது. எனவே இன்னும் கூடுதலாக தண்ணீரை சேமிக்க குளப்பத்துக்குளம் பகுதியில் உள்ள கருவேல மரங்களை வெட்டி அகற்ற பொதுப்பணித்துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

**கடலூரில் காய்கறிகளின் விலை உயர்வு**

கடலூர்,

கடலூரில் காய்கறிகளின் விலை உயர்ந்து வருகிறது.

<u>மார்க்கெட் – உழவர் சந்தை</u>

கடலூரில் அண்ணாமார்க்கெட், பான்பரி மார்க்கெட், உழவர் சந்தை ஆகிய இடங்களில் காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அண்ணாமார்க்கெட், பான்பரி மார்க்கெட் ஆகிய இடங்களுக்கு

வெளிமாநிலங்களில் இருந்து கொண்டு வரப்படும் காய்கறிகளை வியாபாரிகள் விற்பனை செய்து வருகின்றனர்.

கடலூர் உழவர் சந்தையில் கிராமப்புற விவசாயிகள் தங்கள் வயல்களில் விளைந்த காய்கறிகளை அறுவடை செய்து நேரிடையாக விற்பனை செய்து வருகின்றனர். இதனால் உழவர் சந்தையில் நாள்தோறும் கூட்டம் அதிகரித்து காணப்படும். இதே போல் அண்ணாமார்க்கெட், பான்பரி மார்க்கெட் ஆகிய பகுதிகளிலும் காய்கறிகளை ஏராளமானோர் வாங்கிச்சென்று வருகின்றனர்.

<u>காய்கறிகள் விலை உயர்வு</u>

இந்நிலையில் காய்கறிகளின் விலை கடந்த 2 மாதங்களாக குறைந்து காணப்பட்டது. இதனால் பொதுமக்கள் அதிக அளவில் காய்கறிகளை வாங்கி பயன்படுத்தி வந்தனர். இதைத்தொடர்ந்து ஒரு சில காய்கறிகளின் விலை மட்டும் உயர ஆரம்பித்தது. தற்போது அனைத்து காய்கறிகளின் விலையும் சராசரியாக உயர்ந்து வருகிறது.

கடந்த 2 நாட்களுக்கு முன்பு ஒரு கிலோ கத்திரிக்காய் ரூ.20 ஆக இருந்தது. தற்போது ரூ.28 ஆக உயர்ந்துள்ளது. அதேபோல் ரூ.20–க்கு விற்பனை செய்த தக்காளி ரூ.26–க்கும் விற்பனை செய்யப்படுகிறது. ரூ.60–க்கு விற்பனை செய்யப்பட்டு வந்த இஞ்சி தற்போது ரூ.110–க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதேபோல் குறிப்பிட்ட சில காய்கறிகளின் விலை அதிகரித்துள்ளது.

அதன் விவரம் வருமாறு:–

காய்கறிகள் பழைய விலை(ஒரு கிலோ) புதிய விலை(ஒரு கிலோ)

கேரட்(பெங்களூரு) ரூ.20 ரூ.36

கேரட்(மேட்டுப்பாளையம்) ரூ.22 ரூ.40

பீன்ஸ் ரூ.60 ரூ.70

பீட்ரூட் ரூ.20 ரூ.28

மிளகாய் ரூ.15 ரூ.22

முட்டை கோஸ் ரூ.16 ரூ.20

பெரிய வெங்காயம் ரூ.28 ரூ.30

வெள்ளரி ரூ.20 ரூ.28

புடலங்காய் ரூ.10 ரூ.16

ஆனால் சவ்சவ், சாம்பார் வெங்காயம், உருளைக்கிழங்கு, முள்ளங்கி போன்றவைகளின் விலையில் மாற்றம் இல்லை.

மேலும் விலை உயர வாய்ப்பு

இது பற்றி அண்ணா மார்க்கெட்டை சேர்ந்த வியாபாரி ஒருவர் கூறுகையில், முன்பெல்லாம் ஏப்ரல் மாதம் முதல் ஜூலை மாதம் வரை தக்காளி விளைச்சல் அதிகமாக இருக்கும். இதனால் கிலோ 2 ரூபாய்க்கு கூட விற்பனை செய்யப்படும். உற்பத்தி குறைவால் காய்கறிகள் தட்டுப்பாடு ஏற்படுகிறது. இதன் மூலம் விலை உயர்ந்து வருகிறது.

இதற்கு முன்பு பீட்ரூட் ரூ.8 முதல் ரூ.10 வரை அதிகபட்சமாக விற்பனை செய்யப்படும். ஆனால் தற்போது ரூ.28 வரை விலை உயர்ந்து விட்டது. இந்த விலை மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது என்றார்.

**ஆசனூர் வனப்பகுதியில் நட்சத்திர ஆமைகள் எண்ணிக்கை அதிகரிப்பு**

சத்தியமங்கலம்,

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்தில் பண்ணாரி, ஆசனூர், தலமலை, திம்பம், கேர்மாளம், பவானிசாகர் உள்ளிட்ட வனப்பகுதிகள் உள்ளன. இங்கு யானைகள், புலிகள், சிறுத்தைகள், கழுதைப்புலி போன்ற விலங்குகள் வசித்து வருகின்றன. சீரான தட்பவெப்ப நிலை, குடிநீர் ஆதாரம், அடர்ந்த காடு போன்றவையே வனவிலங்குகளின் புகலிடமாக உள்ளன.

சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்தில் நட்சத்திர ஆமைகள் வளரக்கூடிய சூழல் உள்ளதால் அவைகள் இனவிருத்திக்காக சத்தியமங்கலம், திம்பம், ஆசனூர், கேர்மாளம் ஆகிய வனப்பகுதிகளில் விடப்பட்டுள்ளன. தற்போது இனப்பெருக்கம் ஏற்பட்டு நட்சத்திர ஆமைகள் ஆயிரத்தை தாண்டும் என கணக்கிடப்படுகிறது.

இதுகுறித்து வனவர் ராஜேந்திரன் கூறும்போது, ‘அரிய வகை நட்சத்திர ஆமைகள் 70 ஆண்டுகள் முதல் 100 ஆண்டுகள் வரை வாழக்கூடியது. மருத்துவ குணம் கொண்ட நட்சத்திர ஆமைகள் வனத்தில் உள்ள

நுண்ணுயிர் உயிரினங்களை சாப்பிட்டு வாழும் தன்மை கொண்டது. இவைகள் காட்டில் தினமும் 10 கி.மீ. தூரம் நடந்து செல்லும். நட்சத்திர ஆமைகளை வேட்டையாடினால் சட்டப்படி குற்றமாகும்' என்றார்.

**குறுவை சாகுபடிக்கு 91.45 டன் நெல் விதைகள் வேளாண்மை விரிவாக்க மையங்களில் இருப்பு வைத்து விநியோகிக்கப்படுகிறது கலெக்டர் பழனிசாமி தகவல்**

குறுவை சாகுபடி செய்ய தேவையான 91.45 டன் நெல் விதைகள் வேளாண்மை விரிவாக்க மையங்களில் இருப்பு வைத்து விநியோகிக்கப்படுகிறது என்று கலெக்டர் பழனிசாமி கூறினார்.

விழிப்புணர்வு கூட்டம்

நாகை மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் நாகை மாவட்டத்தில் முதல்- அமைச்சரின் குறுவை தொகுப்பு உதவி திட்டத்தை செயல்படுத்துவது குறித்து, முன்னோடி விவசாயிகள், வேளாண்மை துறை, வேளாண்மை பொறியியல் துறை, கூட்டுறவு துறை, தமிழ்நாடு மின்சார வாரியம், பொதுப்பணிதுறை, சிக்கல் வேளாண்மை அறிவியல் நிலையம், விதை சான்று துறை அலுவலர்களுடனான விழிப்புணர்வு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு கலெக்டர் பழனிசாமி தலைமை தாங்கி பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

முதல்-அமைச்சர் கடந்த 4-ந்தேதி டெல்டா மாவட்டங்களில் குறுவை நெல் சாகுபடியினை ஊக்குவிக்கவும், மண்வளத்தினை பெருக்கிடவும் ரூ.41 கோடி நிதி ஒதுக்கீட்டில் குறுவை தொகுப்பு உதவி திட்டத்தினை அறிவித்துள்ளார்.

கூட்டுறவு துறை அலுவலர்களுக்கு

மேலும் வெண்ணாறு பகுதியில் நிலத்தடி நீர் பாதிப்பால் குறுவை நெல் சாகுபடி மேற்கொள்ள இயலாத சூழ்நிலை உள்ளதால் விவசாயிகளின்

வாழ்வாதாரத்திற்கு உதவிடும் வகையில் ஒரு புதிய திட்டமாக மண்ணின் ஈரப்பதத்தை கொண்டு உழவு மேற்கொண்டு குறுகிய கால பயிர்களான பயறு வகைகள் அல்லது பசுந்தாள் உரப்பயிர்களை தொகுப்பு கிராம அணுகுமுறையில் விவசாயிகள் சாகுபடி செய்ய ஏதுவாக இப்பகுதிகளில் வேளாண்மை பொறியியல் துறை மூலமாக உழவு பணி மேற்கொள்ளப்படுவதோடு குறுகிய கால பயறு அல்லது பசுந்தாளுர பயிர் களை சாகுபடி செய்ய தேவையான விதைகள் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்படும் என முதல்-அமைச்சர் அறிவித்துள்ளார்.

முதல்-அமைச்சர் அறிவித்துள்ள குறுவை தொகுப்பு உதவி திட்டத்தின்கீழ் எந்திரங்கள் மூலம் நடவு பணி மேற்கொள்ள தேவையான எந்திரங்கள் இருக்கும் விவரம் குறித்து ஆய்வு செய்து, வேளாண்மை துறை உதவி வேளாண்மை அலுவலர்கள் கட்டணம் ஏதுமின்றி நடவு மேற்கொள்ள விருப்பம் தெரிவிக்கப்படும் விவசாயிகளின் பட்டியலை உடனே தயாரித்து வேளாண்மை பொறியியல் துறை மற்றும் கூட்டுறவு துறை அலுவலர்களுக்கு வழங்க வேண்டும். அப்பட்டியலின் அடிப்படையில் நடவு இயந்திரங்களை கிராம வாரியாக பிரித்து அனுப்பி நடவு பணி தொடங்க அனைத்து ஆயத்த பணிகளையும் மேற்கொள்ள வேண்டும். வேளாண் துறை அலுவலர்கள் நாளையுடன்(திங்கட்கிழமை) நடவு செய்யப்படும் பகுதி விவசாயிகள் பட்டியலை தயார் செய்து வழங்க ஆவண செய்ய வேண்டும். மண்ணின் தரத்திற்கு ஏற்ப விலையில்லா ஐ¤ப்சம் வழங்க வேண்டிய விவசாயிகள் பட்டியலை தயாரித்திடல் வேண்டும். நுண்சத்து மற்றும் உயிர் உரங்கள் விவசாயிகள் பெறப்பட்டதற்கான பட்டியல் மற்றும் அவர்களின் வங்கி கணக்கு எண் ஆகியவற்றை சேகரித்திடல் வேண்டும்.

விதை மானியம்

குறுவை சாகுபடி செய்ய தேவையான 91.45 டன் நெல் விதைகள் வேளாண்மை விரிவாக்க மையங்களில் இருப்பு வைத்து விநியோகிக்கப்படுகிறது. இதில் விதை கிராம திட்டத்தின் கீழ் அனைத்து ரக விதைகளுக்கும் கிலோ ஒன்றுக்கு ரூ.10 வீதம் விதை மானியம்

வழங்கப்படுகிறது. ஒரு விவசாயிக்கு அதிகபட்சம் 20 கிலோ விதை வழங்கப்படும். மேலும், தேவையான அளவு உரங்கள் இருப்பு வைத்து விநியோகிக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

கூட்டத்தில் கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் ராஜேந்திரபிரசாத், வேளாண்மை இணை இயக்குநர் (பொறுப்பு) மயில்வாகனன், மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) சண்முகம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**அலங்காநல்லூர், பாலமேடு பகுதிகளில் பூத்துக் குலுங்கும் நாவல் மரங்கள் இந்த ஆண்டு அதிக மகசூல் கிடைக்கும்; விவசாயிகள் நம்பிக்கை**

அலங்காநல்லூர் மற்றும் பாலமேடு பகுதிகளில் நாவல் மரங்கள் பூத்துக் குலுங்குவதால் இந்த வருடம் அதிக மகசூல் கிடைக்கும் என்று விவசாயிகள் நம்பிக்கையுடன் உள்ளனர்.

பழ விளைச்சல்

மதுரை மாவட்டத்தில் அலங்காநல்லூர் மற்றும் பாலமேடு பகுதிகளில் மா, கொய்யா, சப்போட்டா, பப்பாளி, சீத்தா, வாழை மற்றும் இலந்தை உள்ளிட்ட பல்வேறு பழ வகைகள் விளைச்சல் பெறுகிறது. இதில் நாவல் பழம் மிகவும் முக்கியமானதாகும். இந்த பழமானது வருடத்திற்கு ஒரு முறை விளைச்சல் தரும். அதாவது கடந்த மே மாதம் பூ பூக்கத் தொடங்கியது. இந்த மாதம் அந்த பூக்கள் மலர்ந்து காணப்படுகின்றன.

வருகிற ஜூலை மாத கடைசியில் பிஞ்சுகள் பிடித்து பழம் பழுக்கத் தொடங்கும். அதைத் தொடர்ந்து செப்டம்பர் முதல் வாரம் வரை நாவல் பழம் சீசன் இருக்கும். பாலமேடு வட்டாரத்தில் சேந்தமங்கலம், வலையபட்டி, மறவபட்டி, சாத்தியார் அணை, முடுவார்பட்டி, சரந்தாங்கி, சால்வார்பட்டி மற்றும் அலங்காநல்லூர் பகுதிகளிலும், குமாரம், கள்ளிவேலிபட்டி, கொண்டையம்பட்டி, சம்பக்குளம், எர்ரம்பட்டி

உள்ளிட்ட 50-க்கும் மேற்பட்ட கிராமங்களிலும் நாவல் மரங்களை விவசாயிகள் பராமரித்து பாதுகாத்து வருகின்றனர்.
நம்பிக்கை
இது குறித்து நாவல்மர விவசாயியும், ஊராட்சிமன்ற தலைவருமான சரந்தாங்கி முத்தையன் கூறியதாவது:-

இந்த வருடம் அவ்வப்போது பெய்த பருவ மழையால் வறட்சியை தாங்கி வளரும் நாவல் மரங்களில் அதிக அளவில் பூக்கள் பூத்துள்ளன. இதனால் நாவல் மர விவசாயிகள் எதிர்பார்த்த மகசூல் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் உள்ளனர். நாவல் பழமானது எந்தவித பக்க விளைவுகளும் இல்லாததுடன், சர்க்கரை நோயை கட்டுப்படுத்தும் தன்மை உடையது. இந்த பழம், விதை, முழுவதும் மருத்துவத்திற்கு பயன்படுத்தப்படுகிறது. சர்க்கரை நோயாளிகள் விரும்பி எதிர்பார்க்கும் நாவல் பழ சீசன் அடுத்த மாதம் கடைசியில் தொடங்கும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**நாமக்கல் மண்டலத்தில் இரு வாரங்களில் முட்டைவிலை 51 காசுகள் உயர்வு கேரளாவில் மீன்பிடி தடைக்காலம் தொடங்கியதால் மேலும் உயர வாய்ப்பு**

நாமக்கல் மண்டலத்தில் கடந்த இரு வாரங்களில் முட்டை விலை 51 காசுகள் உயர்ந்து உள்ளது. இதற்கிடையே நேற்று முதல் கேரளாவில் மீன்பிடி தடைக்காலம் தொடங்கியதால் மேலும் உயர வாய்ப்பு இருப்பதாக தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு சார்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

முட்டை விலை உயர்வு

நாமக்கல் மண்டலத்தில் 1100-க்கும் மேற்பட்ட முட்டைக் கோழி பண்ணைகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றின் மூலம் நாள் ஒன்றுக்கு

ஏறத்தாழ 3 கோடி முட்டைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்த முட்டைகளில் ஏறத்தாழ 90 லட்சம் முட்டைகள் வரை கேரளாவுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. எனவே கேரளா முக்கிய விற்பனை ஸ்தலமாக இருந்து வருகிறது.

இந்த நிலையில் ஆந்திரா மற்றும் தெலுங்கானா மாநிலங்களில் சமீபத்தில் லட்சக்கணக்கான கோழிகள் இறந்ததால், இந்திய அளவில் முட்டை உற்பத்தி குறைந்து, அதன் விலை 'கிடுகிடு' என உயர்ந்து வருகிறது.

நாமக்கல் மண்டலத்தை பொறுத்த வரையில் கடந்த 1-ந் தேதி முட்டையின் கொள்முதல் விலை 349 காசுகளாக இருந்தது. அது 'கிடுகிடு' என உயர்ந்து 402 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது. அதாவது கடந்த இரு வாரங்களில் மட்டும் நாமக்கல் மண்டலத்தில் முட்டையின் கொள்முதல் விலை 51 காசுகள் உயர்ந்து உள்ளது. இந்த விலை உயர்வை தங்களுக்கு சாதகமாக மாற்றிக் கொண்ட பண்ணையாளர்கள், குளிர்பதன கிடங்களில் சேமித்து வைத்து இருந்த முட்டைகளை விற்பனை செய்து விட்டனர்.

மேலும் உயர வாய்ப்பு

இதற்கிடையே கேரள அரசு நேற்று முன்தினம் ஆழ்கடலில் மீன்பிடிக்க தடை விதித்து உள்ளது. இந்த தடை உத்தரவு வருகிற ஜூலை மாதம் 31-ந் தேதி வரை அமலில் இருக்கும் எனவும் தெரிவித்து உள்ளது. இதனால் கேரளாவில் முட்டை மற்றும் கோழிக்கான தேவை அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. இதன் காரணமாக நாமக்கல் மண்டலத்தில் முட்டையின் விலை மேலும் உயர வாய்ப்பு இருப்பதால், பண்ணையாளர்கள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

**ரூ.1 கோடியே 30 லட்சத்துக்கு மஞ்சள் ஏலம்**



திருச்செங்கோட்டில் நேற்று 2 ஆயிரத்து 500 மூட்டை மஞ்சள் ரூ.1 கோடியே 30 லட்சத்துக்கு ஏலம் போனது.

மஞ்சள் ஏலம்

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு கூட்டுறவு சங்கத்தில் வாரந்தோறும் சனிக்கிழமை மஞ்சள் ஏலம் நடைபெற்று வருகிறது. வழக்கம்போல் நேற்று மஞ்சள் ஏலம் நடந்தது. இதில் ஆத்தூர், கெங்கவல்லி, கூகையூர், கள்ளக்குறிச்சி, பொம்முடி, அரூர், ஜேடர்பாளையம், பரமத்திவேலூர், நாமக்கல், மேட்டூர், பூலாம்பட்டி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து விவசாயிகள் 2 ஆயிரத்து 500 மூட்டை மஞ்சளை விற்பனைக்காக கொண்டு வந்து இருந்தனர்.

இந்த மஞ்சளை கொள்முதல் செய்ய ஈரோடு, ராசிபுரம், நாமகிரிப்பேட்டை மற்றும் சேலம் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் இருந்து வியா பாரிகள் வந்து இருந்தனர்.

ரூ.1 கோடியே 30 லட்சத்துக்கு விற்பனை

இந்த ஏலத்தில் விராலி ரகம் குவிண்டால் ஒன்றுக்கு 6 ஆயிரத்து 309 முதல் ரூ.8 ஆயிரத்து 899 வரையும், கிழங்கு ரகம் ரூ.5 ஆயிரத்து 399 முதல் ரூ.7 ஆயிரத்து 489 வரையும், பனங்காளி ரகம் குவிண்டால்

ஒன்றுக்கு ரூ.7 ஆயிரத்து 899 முதல் ரூ.18 ஆயிரத்து 199 வரையும் விற்பனை செய்யப்பட்டன. மொத்தம் 2 ஆயிரத்து 500 மூட்டை மஞ்சள் ரூ.1 கோடியே 30 லட்சத்துக்கு ஏலம் போனதாக கூட்டுறவு சங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

**பரமத்தி வேலூரில் தேங்காய் பருப்பு விலை உயர்வு விவசாயிகள் மகிழ்ச்சி**

பரமத்தி வேலூரில் தேங்காய் பருப்பு விலை உயர்ந்து உள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

தேங்காய் பருப்பு

நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூர் தாலுகாவில் வேலூர், பரமத்தி, வசந்தபுரம், பாலப்பட்டி, செங்கப்பள்ளி, கரசப்பாளையம், கபிலர்மலை, ஜேடர்பாளையம் மற்றும் கரூர் மாவட்டம் நொய்யல், சேமங்கி, வேலாயுதம்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் விவசாயிகள் அதிக அளவில் தென்னை மரங்களை வளர்த்து வருகின்றனர்.

இந்த பகுதியில் இருந்து, பரமத்தி வேலூர் அருகே பொத்தனூர் வெங்கமேட்டில் உள்ள ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் ஒவ்வொரு வாரமும் வியாழக்கிழமை தோறும் நடைபெறும் தேங்காய் பருப்பு ஏல சந்தைக்கு விவசாயிகள் தேங்காய் பருப்புகளை அதிகளவில் கொண்டு வருகிறார்கள். இவ்வாறு கொண்டு வரப்படும் தேங்காய் பருப்புகள் ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் முன்னிலையில் மறைமுக ஏலம் விடப்படுகிறது. இந்த ஏலம் முடிந்ததும் விவசாயிகளுக்கு உடனடியாக பணம் பட்டுவாடா செய்யப்பட்டு விடுகிறது.

விலை உயர்வு

சென்ற வாரம் இந்த விற்பனை கூடத்தில் நடைபெற்ற மறைமுக ஏலத்தில் 504 கிலோ தேங்காய் பருப்புகள் ஏலத்திற்கு வந்திருந்தது. இதில் தேங்காய் பருப்பு கிலோ ஒன்று அதிகபட்சமாக ரூ.71.25-க்கும், குறைந்தபட்சம் ரூ.62.65-க்கும், சராசரியாக கிலோ ரூ.66.95-க்கும் விற்பனையானது. நேற்று நடைபெற்ற மறைமுக ஏலத்திற்கு 477 கிலோ தேங்காய் பருப்பு ஏலத்திற்கு வந்திருந்தது. இதில் தேங்காய் பருப்பு கிலோ ஒன்று அதிகபட்சமாக ரூ.76.35-க்கும், குறைந்தபட்சம் ரூ.73.05-க்கும், சராசரியாக கிலோ ரூ.74.75-க்கும் விற்பனையானது. சென்ற வாரத்தை விட தேங்காய் பருப்பு வரத்து குறைவு என்பதால், இந்த வாரம் விலை அதன் விலை உயர்ந்து காணப்பட்டது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

**நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை 14 காசுகள் உயர்வு 393 காசுகளாக நிர்ணயம்**

நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை 14 காசுகள் உயர்ந்து, 393 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது.

முட்டை விலை உயர்வு

நாமக்கல் மண்டலத்தில் முட்டை கொள்முதல் விலை 379 காசுகளாக இருந்து வந்தது. இந்த நிலையில் நேற்று நாமக்கல்லில் நடந்த தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் முட்டை கொள்முதல் விலையை 14 காசுகள் உயர்த்த முடிவு செய்தனர். எனவே முட்டை கொள்முதல் விலை 393 காசுகளாக உயர்ந்துள்ளது.

பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) வருமாறு:- சென்னை-405, ஐதராபாத்-367, விஜயவாடா, தனுகு-362, பார்வாலா-342, மும்பை-406, மைசூர்-401, பெங்களூரு-395, கொல்கத்தா-385, டெல்லி-351.

காரணம் என்ன ?

ஆந்திரா மற்றும் தெலுங்கானாவில் கோடை வெப்பம் காரணமாக அதிக அளவில் முட்டைக்கோழிகள் இறந்தன. இதனால் இந்திய அளவில் முட்டை உற்பத்தி குறைந்து உள்ளது. அதேசமயம் முட்டையின் தேவை அதிகரித்து இருப்பதால், பிற மண்டலங்களில் முட்டை விலை 'கிடுகிடு' என உயர்ந்து வருகிறது. அதற்கு தகுந்தாற்போல் நாமக்கல் மண்டலத்திலும் முட்டை விலை உயர்த்தப்பட்டு வருவதாக பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

கறிக்கோழி கிலோ ரூ.96-க்கு விற்பனை செய்யப்பட்டு வந்தது. நேற்று பல்லடத்தில் நடந்த கறிக்கோழி ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் கிலோவுக்கு ரூ.4 குறைக்க முடிவு செய்தனர். எனவே கறிக்கோழி விலை கிலோ ரூ.92 ஆக குறைந்து உள்ளது. முட்டைக்கோழி கிலோ ரூ.69-க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அதன் விலையில் மாற்றம் செய்யப்படவில்லை.

## குன்னூர் ஏல மையத்தில் 82 சதவீத தேயிலை தூள் விற்பனை

குன்னூர் ஏல மையத்தில் 82 சதவீத தேயிலை தூள் விற்பனையானது.

தேயிலை ஏலம்

குன்னூர் தேயிலை வர்த்தகர் அமைப்பின் சார்பில் வாரந்தோறும் வியாழன், வெள்ளி ஆகிய 2 நாட்கள் தேயிலை ஏலம் நடத்தப்படுகிறது. இந்த ஏலத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்கள் கலந்து கொண்டு தேயிலை தூளை ஏலம் எடுத்து வருகின்றனர்.

விற்பனை எண் 24-க்கான ஏலம் கடந்த 11, 12 ஆகிய தேதிகளில்

நடைபெற்றது. மொத்தம் 19 லட்சத்து 91 ஆயிரம் கிலோ தேயிலை தூள் ஏலத்துக்கு வந்தது. இதில், 13 லட்சத்து 85 ஆயிரம் கிலோ இலை ரகமாகவும், 6 லட்சத்து 5 ஆயிரம் கிலோ டஸ்ட் ரகமாகவும் இருந்தது.

82 சதவீத தேயிலை தூள் விற்பனை

இந்த ஏலத்தில் 82 சதவீத தேயிலை தூள் விற்பனையானது. விற்பனையான அனைத்து தேயிலை தூள் களும் கிலோவுக்கு ரூ.2 விலை ஏற்றம் ஏற்பட்டு உள்ளது. சி.டி.சி. தேயிலை தூளின் அதிகபட்ச விலையாக கிலோ ஒன்றுக்கு 250 ரூபாயாக இருந்தது. ஆர்தோடக்ஸ் தேயிலை தூள் கிலோவுக்கு 246 ரூபாய் என அதிகபட்ச விலையாக ஏலம் சென்றது.

சராசரி விலையாக இலை ரக தேயிலை தூளின் சாதாரண வகை கிலோ ஒன்றுக்கு 40 ரூபாயில் இருந்து 44 ரூபாய் வரையிலும், முதல் ரகதேயிலை தூள் கிலோவுக்கு 100 ரூபாயில் இருந்து 140 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது.

டஸ்ட் ரக தேயிலை தூள்

டஸ்ட் ரக தேயிலை தூளின் சாதாரண வகை கிலோவுக்கு 43 ரூபாயில் இருந்து 50 ரூபாய் வரையிலும், முதல் ரக தேயிலை தூள் கிலோவுக்கு 110 ரூபாயில் இருந்து 165 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது. விற்பனை எண் 25-க்கான ஏலம் வருகிற 18, 19 ஆகிய தேதிகளில் நடக்கிறது. ஏலத்திற்கு மொத்தம் 18 லட்சத்து 74 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வருகிறது.

**ஊட்டி பைக்காரா வனப்பகுதியில் பூச்சிகளை உண்ணும் அரிய வகை தாவரங்கள்**

ஊட்டி அருகே பைக்காரா மற்றும் கிளன்மார்க்கன் வனப்பகுதிகளில் பூச்சிகளை உண்ணும் அரிய வகை தாவரங்கள் காணப்படுகின்றன.

உயிர்ச்சூழல் மண்டலம்

இந்தியாவில் உள்ள முக்கிய உயிர்ச்சூழல் மண்டலங்களில் நீலகிரி உயிர்ச்சூழல் மண்டலம் முக்கிய இடத்தில் உள்ளது. இந்த உயிர்ச்சூழல் மண்டலம் மொத்தம் 5 ஆயிரத்து 520 சதுர கி.மீ. பரப்பளவு கொண்டது. இதில் தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா ஆகிய மாநிலங்களின் வனப்பகுதிகள் அமைந்து உள்ளன.

இந்த உயிர்ச்சூழல் மண்டலத்தில் மொத்தம் 3 ஆயிரத்து 300 வகையான தாவர வகைகளும், 100 வகையான பாலுட்டிகள், 350 வகையான பறவைகள், 120 வகையான ஊர்வனங்கள், 300 வகையான பட்டாம் பூச்சிகள் வாழ்கின்றன.

பூச்சிகளை உண்ணும் தாவரங்கள்

இதில் மிகவும் அரிய வகையை சேர்ந்த பூச்சிகளை உண்ணும் தாவரங்கள் ஊட்டி அருகே உள்ள பைக்காரா, கிளன்மார்க்கன் பகுதியில் காணப்படுகின்றன.

இந்த செடிகள் அதிக பட்சமாக 10 செ.மீ. வரை வளர்கின்றன. இதன் உணர் கொம்புகளில் உள்ள பசை போன்ற திரவம் பூச்சிகளை கவர்ந்து இழுக்கிறது.

இதில் அமரும் பூச்சிகள் இந்த திரவத்தில் ஒட்டிக்கொள்கின்றன. பின்னர் இந்த பூச்சிகள் உணர் கொம்புகளால் மூடப்பட்டு சாகடிக்கப்படுகிறது. இது குறித்து உதவி தோட்டக்கலை துறை இயக்குனர் டாக்டர் ராம்சுந்தர் கூறியதாவது:-

கொசுக்களை கொல்கிறது

உலகம் முழுவதும் சுமார் 150-க்கும் மேற்பட்ட பூச்சி களை உண்ணும் தாவரங்கள் காணப்படுகின்றன. நீலகிரி யில் டிரைசா இன்டிகா, டிரைசா பெல்டேட்டா, டிரைசா பர்மன் ஆகிய 3 ரக பூச்சி உண்ணும் தாவரங்கள் வளர்கின்றன. இந்த செடிகள் குறிப்பாக கிளன்மார்க்கன், பைக்காரா, கல்லட்டி உள்ளிட்ட இடங்களில் அதிகளவு வளர்கின்றன. இந்த தாவரங்கள் பொதுவாக நீர்நிலைகள் மற்றும் ஈரப்பதம் அதிகம் உள்ள இடங்களில் மட்டுமே வளரும். வனப்பகுதிகளில் உள்ள கொசுக்களை இந்த தாவரங்கள் அதிகமாக கொல்கின்றன.

இதன் மூலம் சுற்றுச்சூழலுக்கு இந்த தாவரங்கள் பெருமளவு நன்மை செய்கின்றன. இது போன்ற தாவரங்களை வனத்துறையினரும், பொதுமக்களும் பாதுகாக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

**தேயிலை ஏலத்தின் மொத்த வருமானம் அதிகரிப்பு சர்வதேச மேலாண்மை ஆலோசகர் தகவல்**



தேயிலை ஏலத்தின் மொத்த வருமானம் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு கூடுதலாக கிடைத்து உள்ளதாக சர்வதேச மேலாண்மையியல் ஆலோசகர் பி.எஸ்.சுந்தர் கூறினார்.

கருத்தரங்கு

தேயிலை விற்பனை குறித்த கருத்தரங்கம் குன்னூரில் உள்ள கோத்தாரி வேளாண்மை மேலாண்மை மையத்தில் நடைபெற்றது. கருத்தரங்கிற்கு மைய இயக்குனர் அய்யங்கார் தலைமை தாங்கினார். இதில், சர்வதேச மேலாண்மையியல் ஆலோசகர் பி.எஸ்.சுந்தர் கலந்து கொண்டு பேசியதாவது:-

கடந்த சில மாதங்களாக தேயிலை தூள் தேக்கம் அடைந்து இருந்ததால் அதனை விற்பனை செய்து தேயிலை விற்பனையை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதன்படி விலையை குறைத்து கூடுதலாக தேயிலை தூள் விற்பனை செய்யப்பட்டது. இதன் காரணமாக உள்நாடு மற்றும் வெளிநாட்டு ஏற்றுமதியாளர்கள் அதிகளவில் தேயிலை தூளை வாங்கினார்கள்.

மொத்த வருமானம் அதிகரிப்பு

கடந்த 5 மாதங்களில் மொத்தம் 22 ஏலங்கள் நடைபெற்றன. இதில், பெரும்பாலான வாரங்களில் 25 சதவீதம் முதல் 30 சதவீதம் வரை தேயிலை தூள் தேக்கம் அடைந்தது. சராசரி விலையாக கிலோ ஒன்றுக்கு 75 ரூபாய் 26 காசு என்று இருந்தது. கடந்த ஆண்டில் இதே காலகட்டத்தில் 80 ரூபாய் 14 காசு என்று இருந்தது. இந்த ஆண்டில் விலை குறைத்ததால் விற்பனை அளவு உயர்ந்தது.

மேலும், தேயிலை ஏலத்தின் மொத்த வருமானம் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு கூடுதலாக கிடைத்து உள்ளது. ஏப்ரல் இறுதி வரை கடந்த

ஆண்டை விட விற்பனை அளவும், கிடைத்த விலையும் குறைவாகவே இருந்தன. ஆனால் மே மாதத்தில் தேயிலை வர்த்தகத்தில் ஒரு புதிய தெம்பு காணப்பட்டது. இதனால் 2.32 கோடி கிலோ தேயிலை தூள் விற்பனையானது. கடந்த ஆண்டு 2.16 கோடி கிலோ விற்பனையானது.

கொள்முதல் அளவை அதிகரிக்க வேண்டும்

கடந்த 5 மாதங்களில் மொத்த வருமானமாக 175.36 கோடி ரூபாயாக இருந்தது. கடந்த ஆண்டு 173.10 கோடி ரூபாயாக இருந்தது. இதனால் இந்த ஆண்டில் 2.26 கோடி ரூபாய் கூடுதல் வருமானமாக கிடைத்து உள்ளது. இது 1.31 சதவீத வளர்ச்சியாகும். இந்த ஆண்டில் முதன் முறையாக மொத்த வருமானத்தில் ஏற்றம் கண்டதால் வருங்காலங்களிலும் கொள்முதல் அளவை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

அப்போது தான் வருமானத்தில் உயர்வு ஏற்படும். எதிர்வரும் காலங்களில் தேவை அதிகரிக்கவும் வாய்ப்பு உள்ளது. தேவை அதிகரிக்கும் போது கொள்முதலும் அதிகரிக்கும். எனவே கூடுதல் தேயிலை தூள் கொள்ளளவை தக்க வைத்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

**ஆமணக்கின் தேவை ஆண்டு தோறும் அதிகரித்து வருகிறது கலெக்டர் மதிவாணன் பேச்சு**

ஆமணக்கின் தேவை ஆண்டு தோறும் அதிகரித்து வருகிறது என்று கலெக்டர் மதிவாணன் கூறினார்.

வயல்விழா

திருவாரூர் மாவட்டம் நீடாமங்கலம் ஒன்றியம் வெள்ளக்குடி ஊராட்சியில்

வேளாண்மைத்துறை மற்றும் நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையம் சார்பில் வீரிய ஒட்டு ஆமணக்கு செடிகள் அறிமுகம் மற்றும் வயல் விழா நடந்தது. விழாவிற்கு மாவட்ட கலெக்டர் மதிவாணன் தலைமை தாங்கினார். விழாவில் கலெக்டர் மதிவாணன் கூறியதாவது:- ஆமணக்கு உற்பத்தி செய்யும் நாடுகளிலேயே இந்தியா பரப்பளவிலும், உற்பத்தியிலும் முதலிடத்தில் உள்ளது. ஆமணக்கு சாகுபடியில் உலக பரப்பளவில் 59 சதவீதமும், உலக உற்பத்தியில் 81 சதவீதமும் இந்தியாவில் உள்ளது. இந்தியாவில் 13.17 லட்சம் எக்டேரில் சாகுபடி மேற்கொள்ளப்பட்டு 21.77 லட்சம் டன் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் குறிப்பாக சேலம், நாமக்கல், ஈரோடு, தருமபுரி, பெரம்பலூர் மாவட்டங்களில் 15 ஆயிரம் எக்டேரில் சித்திரை, ஆடி, ஐப்பசி பட்டத்தில் ஆமணக்கு பயிரிடப்பட்டு வருகிறது. ஆமணக்கில் 50 சதவீதத்திற்கு மேலாக எண்ணெய் சத்து இருப்பதால் மிக முக்கிய எண்ணெய் வித்து பயிராக ஆமணக்கு கருதப்படுகிறது. இதிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய் 200-க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஆமணக்கின் தேவை ஆண்டிற்கு ஆண்டு அதிகரித்து கொண்டு வருவது மட்டுமில்லாமல் அதன் விலை சீராகவும் நிலையாகவும் உயர்ந்து கொண்டு வருகிறது.

நோய் தாக்குதல்

ஆமணக்கு பயிரினை உளுந்து, பச்சைபயிறு, பருத்தியுடன் ஊடு பயிராகவும், கலப்பு பயிராகவும் பயிரிட்டு கூடுதல் லாபம் அடைவதோடு மட்டுமின்றி பூச்சி மற்றும் நோய் தாக்குதலையும் குறைத்து அதிக பலன் அடையலாம். ஆகவே ஆமணக்கிற்கு இந்திய சந்தையில் நிலையான மதிப்பு இருப்பதால் சராசரியாக ஏக்கருக்கு ரூ.40 ஆயிரம் வரை லாபம் பெறலாம். இதனால் சராசரி மகசூல் திறன் அதிகரிக்கவும், செடிகள் சாயாது, காய்கள் வெடிக்காத தன்மை கொண்டதாகவும், குறைவான வயது உடையதால் மானவாரிக்கும் பாசனநீர் பற்றாகுறைகள் உள்ள பகுதிக்கும் ஏற்றது. மேலும் குறைவான தத்துப்பூச்சி, வெள்ளை ஈ

தாக்குதலில் இருந்து விடுபெறலாம். ஆகவே விவசாயிகள் வீரிய ஒட்டு ஆமணக்கு பயிரில் நிறைந்து லாபம் பெறலாம். இவ்வாறு அவர் கூறினார்.

நிகழ்ச்சியில் தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலைய இயக்குனர் ரவி, தஞ்சாவூர் மண் மற்றும் நீர் மேலாண்மை ஆராய்ச்சி நிலைய தலைவர் செங்குட்டுவன், ஏத்தாப்பூர் மரவள்ளி மற்றும் ஆமணக்கு ஆராய்ச்சி நிலைய தலைவர் மாணிக்கம், நீடாமங்கலம் வேளாண் அறிவியல் நிலையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் பாஸ்கரன், நீடாமங்கலம் வேளாண்மை உதவி இயக்குனர் இளஞ்செழியன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**மணிலா விதைக்கும் பணியில் விவசாயிகள் தீவிரம்**



கள்ளக்குறிச்சி

கள்ளக்குறிச்சி பகுதியில் விவசாயிகள் மணிலா விதைக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

<u>மணிலா</u>

கள்ளக்குறிச்சி பகுதியில் கடந்த சில நாட்களாக தொடர்மழை பெய்தது. இதன் காரணமாக விவசாய கிணறுகள், ஏரி, குளங்கள் உள்ளிட்ட நீர்நிலைகளும், நிலத்தடி நீர்மட்டமும் கணிசமாக உயர்ந்துள்ளது.

இதனால் மகிழ்ச்சியடைந்த மலைக்கோட்டாலம், லட்சியம், காட்டனந்தல், வானவரெட்டி, புக்கிரவாரி, தண்டலை, வாணியந்தல், ரெங்கநாதபுரம் உள்ளிட்ட 25–க்கும் மேற்பட்ட கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் மனாவாரியாக மணிலாவை டிராக்டர்கள் மற்றும் மாடுகள் மூலம் ஏர் உழுது விதைக்கும் பணிகளில் தீவிரம் காட்டி வருகின்றனர்.

3 மாத பயிர்

இதுகுறித்து விவசாயி ஒருவர் கூறுகையில், மழையை நம்பி தற்போது மானாவாரி பட்டத்தில் 3 மாத பயிரான மணிலாவை விதைத்து வருகிறோம். இதற்கு ஒருமுறை உரமிட்டும், 2 முறை களை எடுத்தால் போதும் நன்கு வளர்ந்து அறுவடைக்கு தயார் ஆகிவிடும் என்பதால் இப்பகுதி பெரும்பாலான விவசாயிகள் அதிகளவில் மணிலாவை பயிரிடுகின்றனர். மேலும் அறுவடை செய்யப்படும் மணிலா பயிரை கள்ளக்குறிச்சி வேளாண் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திற்கு கொண்டு சென்று விற்பனை செய்வோம் என கூறினார்.

**தினபூமி**

**தமிழகம், புதுச்சேரியில் ஒரு சில இடங்களில் மழைக்கு வாய்ப்பு**



சென்னை: வெப்ப சலனம் காரணமாக, தமிழகம், புதுச்சேரியில் நேற்று ஒரு சில இடங்களில் மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இது குறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரி கூறியதாவது: வெப்ப சலனம் காரணமாக, தமிழகத்தில் கடந்த சில நாள்களாக ஆங்காங்கே மழை பெய்து வருகிறது. கடந்த 24 மணி நேரத்தில் கன்னியாகுமரி மாவட்டம் குளித்துறையில் 60 மி.மீ, நீலகிரி மாவட்டம் கோத்தகிரியில் 40 மி.மீ, வேலூர் மாவட்டம் ஆம்பூர், கன்னியாகுமரி மாவட்டம் தக்கலை, இரணியல் ஆகிய இடங்களில் தலா 30 மி.மீட்டர் மழை பதிவாகியது.வெப்ப சலனம் காரணமாக, ஞாயிற்றுக்கிழமையன்றும் தமிழகம், புதுச்சேரியில் ஒரு சில இடங்களில் மழை பெய்யும். சென்னை மாநகரைப் பொருத்தவரை, வானம் மேகமூட்டத்துடன் காணப்படும்.

நகரின் ஒரு சில பகுதிகளில், மாலை அல்லது இரவு நேரத்தில் இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச, குறைந்தபட்ச வெப்பநிலை முறையே 100, 82 டிகிரி ஃபாரன்ஹீட் ஆக இருக்கும் என்றார்.

தினகரன்

**முட்டை கொள்முதல் விலை 402 காசாக உயர்ந்தது: கடைகளில் 5க்கு விற்பனை**

நாமக்கல்: நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலையில் நேற்று, மேலும் 9 காசுகள் உயர்த்தப்பட்டு 402 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டது. கடந்த 2014ம் ஆண்டு ஜூன் மாதம் முழுவதும் முட்டையின் பண்ணை கொள்முதல் விலை 300 காசுகளாக இருந்தது. கடந்த 2013 நவம்பர்

கடுமையான குளிர்காலத்தில் தான் ஒரு முட்டையின் விலை அதிகபட்சமாக 403 காசுகளாக இருந்தது. அதுவும் சில நாட்கள் தான். பின்னர் விலை குறைந்துவிட்டது. ஆனால், இந்த ஆண்டு கோடைக்காலத்தில் முட்டை விலையை தொடர்ந்து என்.இ.சி.சி உயர்த்தி வருகிறது.

குளிர்காலத்தில் முட்டை சாப்பிடுபவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும் என்பதால் விலை உயரும். ஆனால் கோடைக்காலத்தில் முட்டை சாப்பிடுபவர்களின் எண்ணிக்கை வெகுவாக குறையும். ஆனாலும் இந்த ஆண்டு விலை உயர்ந்து வருகிறது. தமிழகத்தில் முட்டைக்கு தற்போது ஏற்பட்டுள்ள டிமாண்ட் காரணமாக, இந்த விலை உயர்வு என என்.இ.சி.சி காரணம் கூறிவருகிறது. டிமாண்ட் இருந்தால் ஒரு வாரத்தில் 4 முறை முட்டை விலை உயர்த்துவது ஏன் என்பது தெரியவில்லை.

என்.இ.சி.சி போட்டி போட்டுக்கொண்டு முட்டை விலையை உயர்த்தி வருவதால், சில்லரை விற்பனை கடைகளில் ஒரு முட்டை ரூ.4.50 முதல் 5 ரூபாய் வரை நேற்று விற்பனை செய்ய தொடங்கி விட்டனர். சத்துணவு டெண்டருக்கு சப்ளை செய்யப்படும் ஒரு முட்டையின் தற்போதைய விலை 4.51 காசுகளாகும். இந்த ஆண்டு இதை விட அதிகமாக விலை பெறும் நோக்கில், டெண்டர் எடுப்பவருக்கு ஆதரவாக என்.இ.சி.சி விலையை உயர்த்தி வருகிறது என்று குற்றச்சாட்டு நிலவுகிறது.

**பயிர்களோடு மீன் வளர்க்கும் இந்தோனேஷிய விவசாயிகள்**

துபாய்: உழவின்றி உணவில்லை. உலகெங்கும் விவசாயத்தில் ஈடுபடும் நாடுகளில் அவர்களுக்கென பிரத்யோக விவசாய பாரம்பரிய முறைகள் உண்டு. இந்தோனேஷிய விவசாய முறை சுவாரஸ்யமானது. இங்கு

விவசாயிகள் தங்களது வயல் வரப்புகளில் மீன்களை விட்டு விடுகின்றனர். இதன் மூலமாக அரிசியில் தொற்றும் சிறு பூச்சிகளை மீன்களை உணவாக உட்கொண்டு பயிர்களை பூச்சிகளிடம் இருந்து பாதுகாக்கிறது எனவும் மீன்கள் வயல்களில் உள்ள தண்ணீரில் நீந்துவதனால் வரப்புகளில் அதிகமான ஆக்சிஜன் உண்டாகிறது. மேலும் மீன்களின் கழிவுகள் உரமாகி உதவுகிறது. இந்த இயற்கை முறையின் மூலமாக பத்து சதவீதத்திற்கும் அதிகமாக சாகுபடி கிடைக்கிறது என இந்தோனேசியாவில் விவசாயிகள் மகிழ்ச்சியுடன் கூறுகின்றனர். பண்டைய காலங்களில் தமிழர்கள் இம்முறையை பின்பற்றியதாக விவசாய வல்லுனர்கள் சிலர் தெரிவிக்கின்றனர்.

**தென் மேற்கு பருவமழை தெலங்கானாவில் தீவிரம் வட தமிழகத்தில் மழைக்கு வாய்ப்பு**




சென்னை: தென்மேற்கு பருவமழை தெலங்கானாவில் தீவிரம் அடைந்துள்ளதை அடுத்து வட தமிழகத்தில் இன்று மழை பெய்வதற்கான வாய்ப்பு உருவாகியுள்ளது. கடந்த 5ம் தேதி கேரளாவில் தென்மேற்கு பருவமழை பெய்யத் தொடங்கியது. அதற்கு பிறகு அது வலுப்பெற்று கேரளா, கர்நாடக மாநிலங்களில் நல்ல மழை பெய்து வந்தது. இதற்கிடையே அரபிக் கடல் பகுதியில் உருவான புயல் மேற்கு

நோக்கி நகர்ந்து சென்றதால் கேரளாவில் போதிய மழை பெய்யவில்லை.

இதையடுத்து தற்போது தென் மேற்கு பருவ மழை மேலும் தீவிரம் அடைந்து ஆந்திரா, கர்நாடகா, மகாராஷ்ட்ரா மாநிலங்களில் மழை பெய்வதற்கான வா ய்ப்பு உருவாகியுள்ளது. இதன் காரணமாக வட மாவட்டங்களில் பரவலாக மழை பெய்து வருகிறது. அதிகபட்சமாக நேற்று குழித்துறை 40 மிமீ, திருச்சி 30 மிமீ, வேலூர், காவேரிப்பாக்கம், தர்மபுரி, வாலாஜா 20 மிமீ மழை பெய்துள்ளது. இதையடுத்து, தெலங்கானாவில் தென் மேற்கு பருவமழை தீவிரம் அடைந்துள்ளது. இதனால் வட தமிழகத்தில் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், ஆகிய மாவட்டங்களில் இன்று மழை பெய்யும். மாலை நேரங்களில் இடியுடன் மழை பெய்யும்.

**கேரளாவில் மீன்பிடி தடைக்காலம் துவக்கம்**

திருவனந்தபுரம்: கேரளாவில் 46 நாட்கள் மீன்பிடி தடைக்காலம் நேற்று நள்ளிரவு முதல் துவங்கியது. கேரளாவில் தென்மேற்கு பருவமழை காலமான ஜூன், ஜூலை மாதங்களில் மீன்பிடி தடைகாலம் அமல்படுத்தப்படும், வருடந்தோறும் ஜூன் 15 முதல் ஜூலை 31 வரை விசைப்படகுகள் ஆழ்கடலில் மீன்பிடிக்க தடைவிதிக்கப்படும்.

ஆனால் இவ்வருடம் ஜூன் 1ம் தேதி முதல் ஜூலை 31 வரை 61 நாட்கள் மீன்பிடிக்க கூடாது என்று மத்திய அரசு உத்தரவிட்டிருந்தது. ஆனால் மத்திய அரசின் உத்தரவை ஏற்றுக் கொள்ள முடியாது என்று கேரள அரசு அறிவித்திருந்தது. நேற்று நள்ளிரவு முதல் 46 நாட்கள் மீன்பிடி தடைக்காலம் அமலுக்கு வந்தது.

**நடையனூரில் அசோலா வளர்ப்பு- இயற்கை உயிர்உரம் இடுபொருட்கள் தயாரிப்பு பயிற்சி**

கரூர், : வேலாயுதம்பாளையம் அருகே நடையனூரில் விவசாய உற்பத்தியாளர்கள், தேசிய ஊரக வளர்ச்சி வங்கி, பண்டுதகாரன்புதூர் கால்நடை பல்கலைக்கழக ஆராய்ச்சி மையம், சார்பில் அசோலா வளர்ப்பு மற்றும் இயற்கை உயிர்உரம், இடுபொருட்கள் தயாரிப்பு குறித்த பயிற்சி நடைபெற்றது. நபார்டு வங்கி உதவி பொதுமேலாளர் பாத்திபன் தலைமை வகித்தார். பண்டுதகாரன் புதூர் கால்நடை பல்கலைக்கழக ஆராய்ச்சி மைய இணை பேராசிரியர் மற்றும் தலைவர் டாக்டர் அகிலா, வேளாண்துறை உதவி இயக்குனர் லட்சுமணசாமி, சரஸ்வதி, கிருஷி, விஞ்ஞானகேந்திரா திட்ட ஒருங்கிணைப்பாளர் டாக்டர் திரவியம், ஆகியோர் முன்னிலை வகித்தனர். அசோலா வளர்ப்பு இயற்கை உயிர்உரம் மற்றும் இயற்கை இடுபொருள் தயாரிப்பு, பஞ்சகாவ்யம், மீன்அமினோ அமிலம் இயற்கை பூச்சிவிரட்டி ஆகியவை தயாரிப்பது குறுத்து விவசாயிகளுக்கு விஞ்ஞானி கமலேசன்பிள்ளை பயிற்சி அளித்தார். விவசாயிகளின் சந்தேகங்களுக்கும் விளக்கம் அளித்தார். இதில் பல்வேறு மாவட்டங்களில் இருந்து இயற்கை வேளாண் விவசாயிகள் கலந்துகொண்டனர். விவசாய உற்பத்தியாளர் சங்க தலைவர் சாமியப்பன் வரவேற்றார். மதியழகன் நன்றி கூறினார்.

**விளைச்சல் குறைவால் கரூரில் பழங்கள் விலை உயர்வு**

கரூர், : கரூர் மாவட்டத்தில் பருவமழை கடந்த ஆண்டு வழக்கத்தை விட அதிக அளவு பெய்தது. பரவலாக அனைத்து பகுதியிலும் மழை பெய்ததால் விளைச்சல் அதிகமாக இருந்தது. பழங்களை பொறுத்தளவில் வாழையை தவிர மற்ற பழவகைகள் பிற மாவட்டங்களில் இருந்து விற்பனைக்காக கொண்டு வரப்படுகிறது. தற்போது கத்திரி வெயில் முடிந்தும் இன்னும் வெயில் கொளுத்துகிறது. இதனால் உற்பத்திக்குறைவினால் பழங்களின் வரத்தும் குறைந்துவிட்டது. இதனால் விலையும் அதிகமாகிவிட்டது. பழக்கடைகளில் தற்போது

ஆப்பிள் ஒரு கிலோ ரூ.200க்கு விற்பனை செய்யப்படுகிறது.

ஆரஞ்சு ரூ.60, சாத்துக்குடி ரூ.50, திராட்சை ரூ.60, மாதுளம் ரூ.150 முதல் ரூ.180வரையும் விற்பனை செய்யப்படுகிறது. கொய்யாப்பழம் ரூ.60, எலுமிச்சம்பழம் ரூ.80 விலையில் உள்ளது. குறைந்த விலையில் விற்பனையான தர்பூசணி, முலாம் பழங்களின் வரத்து குறைந்து விட்டது. வாழைப்பழம் விலையும் தொடர்ந்து ஏறுமுகத்திலேயே உள்ளது. மோரீஸ்பெரியது ஒன்று ரூ.9 வரை விற்கப்படுகிறது. மற்ற பழங்கள் சில்லரை விற்பனையாக கடைகளில் ரூ.6முதல் விலை

**உள்ளது.தஞ்சையில் மழை**

தஞ்சை, : தஞ்சை மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக விட்டு, விட்டு மழை பெய்து வருகிறது. இதன்படி நேற்று முன்தினம் இரவு பெய்த மழையளவு (மி.மீ)விபரம்: தஞ்சை 3, குருங்குளம் 8, பூதலூர் 3, கல்லணை 1.80, ஒரத்தநாடு 2.60, அதிராம்பட்டினம் 2.60, மதுக்கூர் 5.20 என்று மழையளவு பதிவாகியுள்ளது. நேற்று காலை முதல் வழக்கம்போல் வெயில் அடித்தது.

**தஞ்சை மாவட்டத்தில் 3 லட்சம் டன் நெல் கொள்முதல்கடந்த ஆண்டைவிட அதிகம்**

தஞ்சை, :தஞ்சை மாவட்டத்தில் இந்தாண்டு கோடை சாகுபடியில் 3 லட்சத்து 332 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டைவிட அதிகமாகும். தஞ்சை மாவட்டத்தில் தஞ்சை தாலுகா, திருவையாறு தாலுகாவில் தலா 4, ஒரத்தநாடு தாலுகாவில் 32, பட்டுக்கோட்டையில் 12, பேராவூரணி, திருவிடைமருதூர் தாலுகாக்களில் தலா 2, பாபநாசத்தில் 8, கும்பகோணத்தில் 1 என்று 65 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் இயங்கி வருகிறது. நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் சுமார் 5 கி.மீ தூரத்திற்கு மேல் இருந்தால் மட்டுமே வேறு ஒரு கொள்முதல் நிலையம் திறக்க முடியும்.

கடந்தாண்டு கோடை சாகுபடியில் செப்டம்பர் 30ம் தேதி வரை அதாவது காரீப் பருவம் முடியும் வரை 3 லட்சம் மெட்ரிக் டன் மட்டுமே கொள்முதல் செய்யப்பட்டது. ஆனால் இந்தாண்டு காரீப் பருவம் முடிய இன்னும் 3 மாதம் உள்ளது. இதற்குள் 3 லட்சத்து 882 மெட்ரிக் டன் கோடை சாகுபடி நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இன்னும் 20 ஆயிரம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்ய வாய்ப்புள்ளது. எனவே கடந்த ஆண்டை விட இந்தாண்டு கோடை சாகுபடி நெல் கொள்முதல் அதிகளவில் செய்யப்படும். இவ்வாறு தஞ்சை மண்டல முதுநிலை மேலாளர் முகமதுபாதுஷா தெரிவித்துள்ளார்.

**விவசாய நிலங்களில் மண்வளம் மேம்படுத்த இலவச ஜிப்சம் வேளாண் அதிகாரி தகவல்**

தஞ்சை, : தஞ்சையில் மாவட்ட ஊராட்சி கூட்டம் தலைவர் அமுதாராணி ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் அதிமுக உறுப்பினர் ராமன் பேசும்போது, ஏழை, எளிய மாணவர்களும் தனியார் பள்ளிகளில் கட்டணமில்லாமல் படிக்கும் இலவச கட்டாயக் கல்விச் சட்டத்தின்படி 25 சதவீத இட ஒதுக்கீடு குறித்து கிராம மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். இத்திட்டத்தில் ஏழை மக்கள் பயன்பெறுகின்றனரா என்பதை அதிகாரிகள் ஆய்வு செய்ய வேண்டும். கொள்ளிடம் ஆற்றில் நீலத்தநல்லூர், அணைக்கரை வரை முதலைகள் அதிகம் உள்ளன. அவற்றை ஒருங்கிணைத்து அணைக்கரையில் முதலைப் பண்ணை அமைத்து சுற்றுலா மையமாக மாற்ற வேண்டும் என்றார்.

அதிமுக உறுப்பினர் மெய்க்கப்பன், மதுக்கூர் உக்கடையிலிருந்து பட்டுக்கோட்டை செல்லும் பாதை பழுதடைந்துள்ளது. எனவே பொதுமக்கள் மாணவர்கள் பாதிக்கப்படுகின்றனர். எனவே பாதையை உடனடியாக சரி செய்ய வேண்டும். முதல்வர் அறிவித்துள்ள குறுவை சிறப்பு தொகுப்பு உதவித் திட்டம் உரிய காலத்தில் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். வேளாண் துறை இணை இயக்குனர் சேகர் பேசும்போது, பாய்

நாற்றங்கால் தயாரித்து வைத்துள்ள விவசாயிகளுக்கு வேளாண் பொறியியல் துறை மூலம் நடவு இயந்திரங்களைக் கொண்டு நடவு செய்து தரப்படும். . அதற்கான விவரங்களை விவசாயிகள் அளிக்க வேண்டும். விவசாய நிலங்களின் மண் வளத்தை மேம்படுத்த அரசு சார்பில் இலவசமாக ஜிப்சம் வழங்கப்படும் என்றார்.